நில உரிமை!
கனவுகள் நிறைவேறின...

2021-26

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

நில உரிமை!

கனவுகள் நிறைவேறின...

2021-26

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

வாழ்த்துரை

தமிழ்நாட்டில் அரசு நிர்வாகத்தின் மிகப்பழமையான துறைகளில் ஒன்றாக திகழும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பொது நிருவாகம், ஆளுகை மற்றும் மக்கள் நலனில் ஆழமாக வேரூன்றிய மரபினை உள்ளடக்கிய ஒரு துறை ஆகும். நீண்ட நிர்வாக மரபு கொண்டுள்ள இத்துறை, சமூகநீதி மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியில் உறுதியான அர்ப்பணிப்புடன் செயல்பட்டுவரும் அதேவேளையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான நில உடைமை, சமூக பாதுகாப்பு, புகார்களுக்கான தீர்வு மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற பல்வேறு அத்தியாவசிய சேவைகளை திறம்பட வழங்கி மாவட்ட அளவில் அரசின் கரங்களாக விளங்கி வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்த திராவிட மாடல் அரசு லட்சக்கணக்கான மக்களுக்கு நிலஉரிமை வழங்குவதிலிருந்த நிலம் தொடர்பான பல்லாண்டுகளாக இருந்துவந்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதை தலையாய கடமையாக எடுத்துக்கொண்டு அவற்றை களைவதற்கு தீர்வுகளும் கண்டுள்ளது. குறிப்பாக, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மற்றும் பிற மாவட்ட நகர்ப்புற எல்லையிலிருந்து 16/8 கி,மீ தொலைவிற்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டுமனைபட்டா வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறை செய்ய ஒருமுறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இலவச வீட்டுமனைப்பட்டா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்களில் நில உரிமை மாற்றம், ஈரோடு மாவட்டம் அந்தியூர் மற்றும் கீழ்பவானி நீர்ப்பாசன திட்டங்களில் வழங்கப்பட்ட நிபந்தனைப் பட்டாக்களை நிரந்தரப் பட்டாவாக மாற்றம் செய்வது போன்ற பல்வேறு நீண்டகால பிரச்சனைகளுக்கு தீர்வுகண்டு மக்களின் கனவுகளை நிறைவேற்றி உள்ளது. இவ்வரசு கடந்த ஐந்தாண்டுகளில் (2021 முதல் 2026 வரை) 23,56,623 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி பெரும் சாதனை படைத்துள்ளது பாராட்டிற்குரியது.

ஏழை எளியோருக்கு பட்டா வழங்கும் மகத்தான பணிகளை சீராக மற்றும் சிறப்பாக செயல்படுத்திய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நில நிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்தை சிறப்பாக வடிவமைத்த அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்.

அன்புடன்,

மு.க. ஸ்டாலின்



நில உரிமைகள்:

நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குவது சமூக முன்னேற்றத்திற்கு அவசியம் என்று அண்ணா நம்பினார். பட்டா என்பது ஒருவரின் நில உரிமையைக் குறிக்கும் ஆவணம். எனவே, ஏழைகளுக்குப் பட்டா வழங்குவது அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும்.

- பேரறிஞர் அண்ணா

சமூக நீதியின் கருவி:

நிலம் வைத்திருப்பது சமூக அந்தஸ்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் குறிக்கும் என்பதால், பட்டா வழங்குவதன் மூலம் சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கு சமத்துவத்தை நிலைநாட்ட முடியும்.

- கலைஞர் மு. கருணாநிதி

‘எல்லார்க்கும் எல்லாம்
என்ற திசை நோக்கிச்
செல்லட்டும் இந்த
வையம்’ என்பதைப்
போன்ற பொற்காலத்தை
உருவாக்க உறுதி
கொண்டுள்ளது இந்த அரசு.
குடிசைகளை மாற்றுவது
மட்டுமல்ல, குடிசைகளில்
வாழும் மக்களுடைய
வாழ்வாதாரத்தையும்
உயர்த்திட வேண்டும்,
அவர்களுடைய
வாழ்க்கைத்தரத்தையும்
உயர்த்திட வேண்டும்.

- மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பட்டா மற்றும் நில உரிமை முறையின் வரலாற்று பரிணாமம்

மன்னராட்சியில் நில உரிமை

பட்டா என்பது 'பட்டையம்' என்ற சொல்லிலிருந்து மருவி உருவானது. நில வருவாயின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட விவசாயிக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் ஒருவகை நிலப் பத்திரம் பிற்காலத்தில் 'பட்டா' என அழைக்கப்பட்டது. நில உரிமை என்பது சமூக நீதி, பொருளாதார பாதுகாப்பு மற்றும் சுயமரியாதையை நிர்ணயிக்கிறது. தமிழ்நாட்டில் பட்டா வழங்கும் நடைமுறையானது சங்க காலத்திலிருந்து தற்போதைய இணையவழி 'தமிழ்நிலம்' வரை பல்வேறு பரிணாம வளர்ச்சிகளை அடைந்துள்ளது.

சங்க இலக்கிய ஆய்வுகளில், தமிழ்ச் சமூகத்தில் 'கிராமம்' என்பது தன்னிறைவு பெற்ற பொருளாதார அலகாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் நிலம் சமூகத்தின் பொது வளமாகக் கருதப்பட்டாலும், அதன் உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்டு தனிநபர் பங்கீடு செய்யப்பட்டது. இதுவே, அமானி (Amani) முறை ஆகும். இதுவே, பின்னாளில் பட்டா நடைமுறைக்கான அடித்தளமாக அமைந்தது.

சங்க காலத்திற்குப் பிந்தைய காலத்தில் நிலம், வெறும் உழவுத் தளமாக இல்லாமல், மரபுரிமைச் சொத்தாக மாறியது. மதராஸ் மாகாணத்திலிருந்த மாவட்டங்களில் இந்த உரிமை பொதுவாக காணியாட்சி (Kaniatchi / Kani) என அழைக்கப்பட்டது. வேளாளர் சமூகத்தில் – காணியாட்சி, பிராமணர்களிடம் – ஸ்வஸ்தியம், பொதுவாக – அதினம், முகலாயர் ஆட்சி மற்றும் அதன் பிந்தைய காலங்களில் மிராசி (Mirasi) எனவும், தஞ்சாவூர் (மராட்டியர் ஆட்சியில்) – குபாவா எனவும் திண்டுக்கல் பகுதியில் 'பட்டுக்கூட்டு ரியோட்' எனவும் அழைக்கப்பட்டது.

நாயக்கர் மற்றும் முகலாயர் ஆட்சிக் காலங்களில் நிலம் அரசின் முக்கிய வருவாய் ஆதாரமாக மாறியது. இதனால் விவசாயிகளின் மரபுரிமை நிலம், காலப்போக்கில் வரி வசூல் கருவியாக மாற்றப்பட்டது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை; பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் இனாம் வழங்கும் முறை தொடங்கப்பட்டு, கோவில்கள், மடங்கள், பிராமணர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊர்சேவை இனாம் எனப் பல்வேறு சேவைகளுக்காக நிலங்கள் வழங்கப்பட்டன.

பிரிட்டிஷ் காலத்தில் நில உரிமை

நிலத்தில் அயராது உழைத்த விவசாயிகளுக்கு அந்நிலங்களின் மீது உரிமை இல்லாமல் இருந்தது. ஆங்கிலேயர்கள் நிரந்தரமான நில வருவாய் முறையை உருவாக்க முயன்றனர். 1793ஆம் ஆண்டு ஜமீன்தாரி முறையும், 1819ஆம் ஆண்டு ரயத்துவாரி முறையும் அறிமுகம் செய்யப்பட்டது. விவசாயிகள் (ரயத்து) அரசுக்கு நேரடியாக வரி செலுத்தத் தொடங்கினர். பட்டா, ஆவணமாக உருவானது.

1859-ஆம் ஆண்டில், அரசாணை நிலை எண்.1053, வருவாய்த் துறை நாள் 05.08.1859இல், ஆண்டு வரியை 20 மடங்கு செலுத்தி Freehold Tenure பெறும் முறை அறிமுகமானது. பின்னர் 99 ஆண்டுகள் Leasehold முறையிலும் வழங்கப்பட்டது. இதன் மூலம் நில உரிமை, மரபுரிமையிலிருந்து சட்டப்பூர்வ ஆவண உரிமையாக மாறியது.

1892-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் நில வரலாற்றில் முக்கிய திருப்பமாகும். ஆதிதிராவிடர் மக்களுக்குத் தரிசு நிலங்கள் விவசாயப் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதன் விளைவாக 'பஞ்சமி' என்ற சொல்லாடல் உருவானது.

சுதந்திரத்துக்குப் பின் 1948 முதல் 1967 வரை நில உரிமைக்கான அரசின் முன்னெடுப்புகள்

நில உரிமை முறைகளில் சமமான நிலைப்பாட்டினை உருவாக்கவும், உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் 1948 மற்றும் 1963 ஆகிய ஆண்டுகளில் முறையே எஸ்டேட் மற்றும் இனாம் உடைமை முறைகளும் இதர சில நில உடைமை முறைகளும் பல்வேறு சட்டங்கள் மூலம் ஒழிக்கப்பட்டு 'இரயத்துவாரி நில உடைமை முறை' அரசால் கொண்டுவரப்பட்டது. இச்சட்டங்களின் மூலம், விவசாயிகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இவை சமூக நீதி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் அரசின் நேரடி நிர்வாகத்தை வலுப்படுத்த உதவின.

விளிம்புநிலையில் உள்ள அனைத்து மக்களுக்கும் நில உரிமை கிடைப்பதற்கு ஏதுவாக, நிலச் சீர்த்திருத்தம் மற்றும் நில உச்சவரம்பு சட்டங்கள் 1963-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

- 1928 முதல் 1977 வரை 'ஏழை நபர்' என்கின்ற வரையறையை நிர்ணயித்து, அரசு வெளியிட்ட பல்வேறு அரசாணைகள் மூலம் தியாகிகள், நிலமற்ற ஏழைகள், சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்டவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க 'முன்னுரிமை' வழங்கப்பட்டது.
- 1970-ஆம் ஆண்டில் அரசாணை நிலை எண்.3153, வருவாய்த் துறை, நாள் 12.10.1970-ன் மூலம், வீட்டுமனை ஒப்படை (House Site Assignment) வழங்குவதற்கான முன்னுரிமை வரிசை நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி, முதலில் தேசப் பாதுகாப்புப் படையினரின் குடும்பங்கள் (போரில் உயிரிழந்தோர் அல்லது மாற்றுத்திறனாளிகளானோர்), நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், பணியில் உள்ள ராணுவத்தினர், ஓய்வுபெற்ற ராணுவம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையினர், பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர், தங்கக் கட்டுப்பாடு காரணமாக இடம்பெயர்ந்த பொற்கொல்லர்கள் மற்றும் பிற நிலமற்ற ஏழை மக்கள் என வரிசைப்படுத்தப்பட்டது.
- 1978-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு பட்டியலின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா உட்பட பிற நலத் திட்டங்களுக்காக நிலங்களை கையகப்படுத்திட "தமிழ்நாடு ஹரிஜன் நலத் திட்டங்களுக்கான நிலங்களை கைப்பற்றுதல் சட்டம்" (தமிழ்நாடு சட்டம் எண்.31 of 1978) கொண்டுவந்து சமூகநீதி கொள்கைகளை அரசு நடைமுறைப்படுத்தியது.
- 1980-களில் நகர்ப்புற பகுதிகளில், நகர நில அளவைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நகர நில ஆவணங்கள் மேம்படுத்தப்பட்டன.
- 1987-இல், அரசுப் புறம்போக்கு நத்தம் நிலங்களில் வீடுகட்டி குடியிருந்துவந்த மக்களுக்கு முழு உரிமை அளித்திட 1987-ஆம் ஆண்டு முதல், நத்தம் நிலஅளவை மற்றும் நத்தம் நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. மேலும், மனை வரி வசூலிப்பதும் அரசால் ரத்துசெய்யப்பட்டது.
- 1987-ஆம் ஆண்டில், அரசாணை எண்.1763, வருவாய்த் துறை, நாள் 19.11.1987-ன்படி விவசாய நோக்கங்களுக்காகவும், வீட்டுமனைகளுக்காகவும் நில ஒப்படைப் பட்டா வழங்கும்போது, மகளிருக்கு அதிகாரம் அளிப்பதை உறுதிசெய்திட அக்குடும்பத்திலுள்ள 'பெண்களின் பெயரிலேயே' பட்டா வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டது.
- 1995-இல் மலைக்கிராமங்களில், நில ஆவணங்களை மேம்படுத்தவும் பட்டாக்கள் வழங்கவும் மலைக்கிராம வருவாய் பின்தொடர் பணி நடைமுறைப்படுத்தப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டன.
- 2006-ஆம் ஆண்டில், அரசாணை எண்.555, வருவாய் நாள் 26.08.2006-ல் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் இலவசமாக வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.
- 2006-ஆம் ஆண்டில், ஊரகப்பகுதிகளில் வசிக்கும் நிலமற்ற ஏழை மக்களுக்குப் பாதுகாப்பான குடியிருப்பும் சட்டப்பூர்வமான நில உரிமையும் வழங்கும் நோக்கில் 10 ஆண்டுகளுக்கும் மேலான குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்திட 'ஒருமுறை வரன்முறை செய்யும் சிறப்புத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. அவை, தொடர்ச்சியாகப் பல்வேறு அரசாணைகள் மூலம் காலநீட்டிப்புச் செய்யப்பட்டுவந்தது. இத்திட்டத்தின் மூலம் பட்டா பெற்ற பயனாளிகளுக்கு மின்சாரம், குடிநீர், சுகாதாரம், கழிப்பிட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் சென்றடைந்தன.
- 2019-ஆம் ஆண்டில், ஊரகப்பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலான குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து பட்டா வழங்கிட அரசாணை.318, வருவாய்த்துறை, நாள் 30.08.2019 வெளியிடப்பட்டது.
- இதன் தொடர்ச்சியாக, 2021-ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து சமூக நீதி கோட்பாட்டினை நிலைநிறுத்த அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு கடந்த ஐந்தாண்டுகளில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10001 வது பட்டா வழங்கும் விழா
மன்னார்குடி.
7-8-70

சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில்
பட்டா வழங்குதல்

<u>சுருக்கம்</u>

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை – பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகள் – வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் – மாநில அளவிலான உயர்நிலை குழு அமைத்தல் – உயர்நிலை குழு மற்றும் உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை</u>

அரசாணை (நிலை) எண்.12

நாள்: 01.03.2024
சோபகிருது வருடம், மாசி 18
திருவள்ளுவர் ஆண்டு 2055
படிக்க:

செய்தி வெளியீட்டு எண். 274, நாள்.12.02.2024.

<u>ஆணை:</u>

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் உள்ள வீட்டுமனைகளுக்கு பட்டாக்கள் வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 12.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில் உயர் நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

2. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் பிற துறைகளில் உள்ள நிலங்களை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள் நடைபெறும் இடங்களில், நில உரிமை மாற்றம் செய்வது குறித்தும், பயனாளிகளுக்கு விற்பனை பத்திரம் வழங்குவது, தனிநபர் பட்டாக்கள் வழங்குவது மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. அதன்படி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் சிறப்பு பணி அலுவலர் (இ.ஆ.ப.,) தலைமையில் வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்டு "சிறப்பு பிரிவு" ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டது.

3. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் வீட்டுவசதித் துறை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநகராட்சி, பொதுப் பணித்துறை, கால்நடைத் துறை) எனப் பல துறைகள் தொடர்புடையதாக இருப்பதால், இதை ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி விரைந்து நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும்,

3. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் வீட்டுவசதித் துறை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநகராட்சி, பொதுப் பணித்துறை, கால்நடைத் துறை) எனப் பல துறைகள் தொடர்புடையதாக இருப்பதால், இதை ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி விரைந்து நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும்,

சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில் பட்டா வழங்குதல் (அரசாணை நிலை எண். 12)

பிரச்சினை

சென்னை மாவட்டம் மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில், 1979 - 1980களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் நில உரிமை மாற்றம் செய்வது குறித்தும், பயனாளிகளுக்கு விற்பனை பத்திரம் வழங்குவது, தனிநபர் பட்டாக்கள் வழங்குவது மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் மற்றும் ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கைப் பிரதி (Manual Patta) வீட்டுமனைப் பட்டாக்களை வருவாய் ஆவணங்களில் பதிவேற்றம் செய்வது, சென்னை கிராம நத்தம் நிலங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல் மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சி குழும மனையிடங்களுக்குப் பட்டா வழங்குதல் ஆகியவற்றில் நடைமுறை சிக்கல்கள் நிலவிவந்தன. சென்னை மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மேற்கண்ட நடைமுறை சிக்கல்களுக்குத் தீர்வுகண்டு பட்டா வழங்கிட பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்துவந்தனர்.

தீர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, சிறப்பு கவனம் செலுத்தி கள ஆய்வு மற்றும் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழு (State Level Empowered Committee) அரசாணை (நிலை) எண்.12, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, நாள் 01.03.2024-ன்படி அமைக்கப்பட்டது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் அவர்களின் தலைமையில் செயல்பாட்டுக் குழு (Working Committee) அமைத்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அவர்களை சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்து மாதந்தோறும் சென்னை மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளுடன் பணி முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சாதனைகள்

- G.O.No.105, நாள் 13.03.2024-ன்படி 19,114 இனங்கள் அரசு நிலம் என்ற வகைப்பாட்டிலிருந்து இரயத்துவாரி பட்டா என வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டன.
- நகர நில அளவைப் பதிவேட்டில் (TSLR-ல்) சர்க்கார் மனை / நன்செய் / புன்செய் என உள்ள பதிவுகளை இரயத்துவாரி மனை என வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டு 15,229 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 47,338 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டத்தின் கீழ் 51,812 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டத்தின் கீழ் 8087 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 2000ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஒருமுறை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1,008 மனைப் பட்டாக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரசாணை எண்.12ன் கீழ், 45 ஆண்டுகளாக நிலவிவந்த நிலம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாணப்பட்டு 1,42,588 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில் வழங்கப்பட்ட பட்டா (அரசாணை எண்.12)



வழங்கிச்

அரசாணை நிலை எண். 12

சொன்ன மாதிரியே செஞ்சுருச்சு அரசு!

“நான் குடிசை மாற்று வாரியம் மூலமா 1980ஆம் வருஷத்துல இந்த இடத்துக்குக் கிரையம் பண்ணோம். ஆனா, இதுவர இடத்துக்கான பட்டா, Layout Copy இல்லாம ரொம்ப சிரமப்பட்டோம். அசல் பத்திரம் இல்லாம எங்களால வீட்ட சரிசெய்யவோ விற்கவோ முடியல. இது சம்பந்தமா அரசுகிட்ட மனு கொடுத்தோம். அடுத்த ஆறு மாசத்துலயே நடவடிக்க எடுத்து, ‘உங்க எல்லாருக்கும் பட்டா கொடுக்கப்போறம்’னு தகவல் கொடுத்தாங்க. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்துல மனு கொடுத்ததும் அதிகாரிங்களே எங்க வீட்டுக்குப் பக்கத்துல Camp நடத்தி, Documents எல்லாத்தையும் Check பண்ணத்துக்கு அப்றம்தான் பட்டா கொடுத்தாங்க. இதுல என்னைய மாதிரி இருந்த நூறு பேருக்கும் பட்டா கொடுத்துட்டாங்க. இது ரொம்ப பெரிய விஷயம். எல்லாரும் சந்தோஷமா இருக்கோம்.”

திருமதி. **இந்திராணி,**
செரியன் நகர், தண்டயார்பேட்டை,
சென்னை மாவட்டம்

இந்த உதவிய மறக்கமாட்டோம்

"இந்தக் கூர வீட்லதான் 40 வருஷமா இருக்கோம். பட்டா கிடைக்காத ரொம்ப கஷ்டப்பட்டேன். எனக்கு 57 வயசாகுது. 3 பசங்க இருக்காங்க, ஆனா அவங்க கல்யாணம் பண்ணி தனியா போய்ட்டாங்க. நான் வாட்ச்மேன் வேலை செய்றேன். வர 7,000 ரூவா வருமானதுலதான் சாப்பாடு, மனைவிக்கு மருந்து செலவுனு பாக்கறேன். நான் எதிர்பார்த்துட்டுருந்த பட்டா எப்போ வரும்னு தெரியாம இருந்துச்சு. இப்போ முதல்வர் ஐயாவால பட்டா கெடைச்சுருக்குது."

திரு. **சேகர்,**
அமிஞ்சிகரை, சென்னை மாவட்டம்.

அரசாணை நிலை எண். 12

இனி ஒழுகாத வீட்டுக்குப் போயிருவோம்

“நான் அம்பது வருஷமா இங்க இருக்கேன். எனக்குப் பட்டா கிடையாது, பொறம்போக்கு நிலத்துலதான் இருக்கேன். பட்டாவுக்குப் பல தடவ முறையிட்டும் கிடைக்கல. எத்தனை ஆட்சி வந்தும் கிடைக்கவே இல்ல. இப்போதான் பட்டா குடுத்துருக்காங்க. இந்தப் பட்டாவ வச்சு Loan வாங்க முடியும். அப்புறம் கூர வீட்ட விட்டுட்டு Concrete வீடு கட்டிக்குவோம். இனி வீடு ஒழுகாம இருக்கும்.”

திரு. **தேவராஜன்,**
சின்மயா நகர், சென்னை மாவட்டம்.

வாழ்க்கையும் வாழ்வாதாரமும் கிடைச்சருக்கு!

"பதினஞ்சு வருஷமா இங்க வசிக்கிறேன். கணவர் இறந்து அஞ்சு வருஷம் ஆச்சு. நான் வீட்டு வேலைக்குப் போய்தான், என் ரெண்டு பிள்ளைங்களையும் படிக்கவைக்குறேன். பட்டா கிடைக்காம ரொம்ப கஷ்டப்பட்டேன். எங்க கஷ்டத்த புரிஞ்சுக்கிட்டு Government பட்டா வழங்கிருக்கு. இதனால எம் பிள்ளைங்க நல்லா வளருவாங்க. நானும் சொந்தமா ஒரு தொழில் தொடங்கலாம்னு இருக்கேன்."

திருமதி. **கலைவாணி,**
கன்னிகாபுரம், சென்னை மாவட்டம்.

ஒருவழியா எங்களுக்கு இடம் சொந்தமாகிருச்சு

"அனல்மின் நிலையம் வர காரணத்துனால, ஆத்துக்கு அந்தாண்ட இருந்து எங்கள இந்தாண்ட கொண்டுவந்தாங்க. இடமும் குடுத்து வேலையும் குடுத்தாங்க. இங்க, 35 வருஷமா இருக்கோம். ஆனா, எங்களுக்குப் பட்டா இல்ல. ரொம்ப கஷ்டமாயிடுச்சு. எத்தனையோ மனு கொடுத்தும் பாட்டாவே வழங்கல. இப்போ ஐயா ஆட்சில எங்களுக்குப் பட்டா கெடைச்சது மகிழ்ச்சியா இருக்கு."

திருமதி. ***கல்பனா,***
முகத்துவார குப்பம், சென்னை மாவட்டம்.

அரசாணை நிலை எண்.97(ம)205

சுருக்கம்

நிலம் – ஆக்கிரமிப்பு குடியிருப்புகளை முறைப்படுத்தி இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல் – சென்னை மாநகரம் மற்றும் அதன் சூழ் பகுதி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் பகுதிகள்) – சென்னை மற்றும் அதன் சூழ் பகுதிகளுக்காக வருவாய்த் துறையின் 17.03.1962ஆம் நாளிட்ட 1135ஆம் (நிலை) எண் அரசாணையில் விதிக்கப்பட்ட தடையின்படி – மாவட்ட தலைமையிடங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலிருந்து 16/8 கி.மீ சுற்றளவிற்குள் உள்ள ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புக் குடியிருப்புகளுக்கு ஒரு முறை மட்டும் தளர்வளித்து முறைப்படுத்துதல் – வருவாய்த் துறையின் நிலையாணை 21(1)–இன் படி தடையாணையை ஒரு முறை மட்டும் தளர்வு செய்தல் – ஆணைகள் மற்றும் விரிவான வழிகாட்டுக் குறிப்புகள் – வெளியிடப்படுகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [நி.மு–1(1)] துறை

அரசாணை (நிலை) எண்.97 — **நாள்: 21.02.2025**

குரோதி வருடம் மாசி 09,

திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 1135, வருவாய்த் துறை, நாள்: 17.03.1962.
2. அரசாணை (நிலை) எண்.168, வருவாய்த் துறை, நாள் 27.03.2000.
3. அரசாணை (நிலை) எண்.465, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.மு.–1(2)] துறை, நாள் 27.11.2018.
4. அரசாணை (நிலை) எண்.496, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.மு.–1(2)] துறை, நாள் 24.12.2018.

11. அரசு நில நிருவாக ஆணையரின் கருத்துருவைக் கவனமாக பரிசீலனை செய்த பின்னர், ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, சென்னை மற்றும் அதன் சூழ் பகுதியிலும், தமிழ்நாட்டின் ஏனைய மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டத்தை மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறை மற்றும் கட்டமைப்பின்படி செயல்படுத்த ஆணையிடுகிறது. மேற்சொன்ன திட்டத்தை சென்னை மற்றும் அதன் சூழ் பகுதியிலும், ஏனைய மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிப் பகுதிகளிலும் ஒரு முறை மட்டும் முறைப்படுத்தும் திட்டமாக செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டிநெறிமுறைகள் தனித்தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

P. அமுதா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் சேப்பாக்கம், சென்னை–600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை–600 009.

நகல் பெறுவோர் :
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
மாண்புமிகு (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை) அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

10. சென்னை மற்றும் அதன் சூழ் பகுதிகள் உள்ளிட்ட நகர்ப்புறப் பகுதிகளில் சிறப்பு முறைப்படுத்தல் திட்டம் என்பது ஒரு முறை மட்டும் முறைப்படுத்தும் திட்டமாகச் செயல்படுத்தப்படும். மேலும் இந்தத் திட்டம் 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் செயலில் இருக்கும். மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தளர்வுகளும் இந்த சிறப்பு முறைப்படுத்தல் திட்டம் செயல்படுத்தப்படும் காலத்திற்கு மட்டுமே பொருந்தும்.

ஒருமுறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

பிரச்சினை

சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்துவரும் மக்களுக்கு 1962ஆம் ஆண்டிலிருந்து அரசின் தடையாணை அமலில் இருந்ததால் பட்டாக்கள் வழங்க இயலாத நிலை தொடர்ந்தது. இதனால் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய இயலாமலும், தங்களது சொத்தை அடமானம் வைத்து வங்கிகள் மூலம் கடன் பெற முடியாமலும், தங்கள் ஆக்கிரமணங்கள் அகற்றப்படும் என்ற தொடர் அச்சத்திலும் வாழ்ந்துவந்தனர்.

தீர்வு

அரசாணை நிலை எண்.1135, வருவாய்த்துறை நாள் 17.03.1962-இன்படி சென்னை மற்றும் அதன் சூழ்ப்பகுதிகளில், மற்றும் மாவட்ட தலைமையிடங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லையிலிருந்து 16/8 கி.மீ. தொலைவிற்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையாணையை தளர்வுசெய்ய அமைச்சரவையால் முடிவெடுக்கப்பட்டு ஒருமுறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணை (நிலை) எண்.97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 21.2.2025 மற்றும் அரசாணை (நிலை) எண்.205, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 26.04.2025 வெளியிடப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் 65,318 பட்டாக்கள் மற்றும் சென்னை மற்றும் மாநகர் சூழ்ப்பகுதிகளில் 17,691 பட்டாக்கள் என மொத்தமாக 83,009 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால், 60 ஆண்டுகளாக வீடுகட்டி வசித்துவந்த இடத்திற்குப் பட்டா இல்லா நிலை மாறி நில உரிமை பெற்று அடிப்படை வசதிகளை மேம்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒருமுறை சிறப்பு வரன்முறைத் திட்டத்தில் மாவட்ட வாரியாக பட்டா வழங்கப்பட்டதன் விவரம் (அரசாணை நிலை எண்.97 மற்றும் 205)



எங்களுக்கு விடிவு காலம் பொறந்துருச்சு

“என் பாட்டன் காலத்துலேருந்து, பல தலைமுறையா இந்த இடத்துலதான் இருக்கோம். எங்களைச் சுத்தியும் வீடுக எவ்வளவோ பெருசா ஆயிடுச்சு. நாங்க இன்னும் அப்படியே இருக்கோம். அரசு, எங்கள ‘இங்கிருந்து போயிடுங்க, உங்களுக்கு வேற இடத்துல வீடுகட்டி தர்றோம்’னு சொன்னாங்க. எங்க பூர்வீகத்தை விட்டுக்கொடுக்க மனசு இல்ல. என் பசங்களும் இங்கேயே இருக்கணும்றதுதான் என் விருப்பம். நம்ம முதலமைச்சர், மேயராக இருந்தப்போதான் எங்க ஏரியாக்கு லைட் கொடுத்தாரு. இப்போ இங்க இருக்குற 160 குடும்பங்களுக்கும் பட்டா குடுத்துருக்காங்க. இப்பதான் எங்களுக்கு விடிவு காலம் பொறந்த மாதிரி இருக்கு.”

திருமதி. **ராதிகா,**

ஜிப்ஸி காலனி, கோட்டூர்,
கிண்டி தாலுக்கா,
சென்னை மாவட்டம்.



அரசாணை நிலை எண்.97 (ம) 205

நாங்க குடும்பத்தோட சந்தோஷமா இருக்கோம்!

“நாங்க இருளர் இனத்தச் சேந்தவங்க. இந்த மலைலதான் நான் வாழ்ந்துவரேன். எட்டு வருஷத்துக்கு முன்ன கல்யாணாகி வந்ததுலேருந்து இந்த வீட்லதான், என் புருஷன் குழந்தைக எல்லாரும் இருக்கோம். நான் இருக்கும் வீட்டிற்குப் பட்டா கேட்டு ஸ்டாலின் ஐயா முகாம்ல மனு கொடுத்தேன். அதுக்கப்புறம், Taluk Officeல இருந்துவந்து பார்த்தாங்க. நான் கூலி வேலை செஞ்சி ரொம்ப கஷ்டப்பட்டு வர்ரோம்னு சொன்னேன், என்னைய பஸ்ல கூட்டிட்டுப் போய் பட்டா கொடுத்தாங்க. என் குடும்பமே ரொம்ப சந்தோஷமா இருக்கோம். “

திருமதி. **மைலாவதி,**
தும்பக்காடு கிராமம், ஜமுனாமரத்தூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

பட்டா கொடுத்தவிய நல்லா இருக்கணும்

“நாப்பது வருஷமா இங்க இருக்கோம். என் வீட்டுக்காரர் செத்து 21 வருஷமாவுது. என் பிள்ளைக்கும் மனநிலை செரியில்ல. இதுவரைக்கும் எங்களுக்கு சொந்தம்னு சொல்லிக்க எதுவும் இல்ல. இப்போ பட்டா வந்ததுல இந்த government குடுத்ததுதான் எங்க சொத்து.”

திருமதி. ***டி.மாரியம்மா,***

படிக்காசுவைத்தான்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

ஊருக்கே வீடு கட்டுன எனக்கு, ஒரு சொந்த வீடு

“நாங்க இந்த எடத்துக்கு வந்து முப்பந்தஞ்சு வருஷம் ஆயிட்டு. கொத்து வேலை, சித்தாளு வேலைக்குப் போறேன். ஆனா, எனக்கு ஒரு வீடு இல்ல. சொந்தம்னு சொல்லிக்க ஒரு இடங்கூட இல்ல. நாங்க தங்கியிருக்குற இடத்துக்கு இவ்ளோ நாளா பட்டா இல்ல. 04.02.2026 அன்னிக்குத்தான் பட்டா கொடுத்தாங்க. ஊருக்கே வீடு கட்டுன எனக்கு, இப்போதான் ஒரு வீடு உறுதியாகியிருக்கு.”

திருமதி. ***அன்புத்தாயி,***
பாரதி நகர் 4வது தெரு, மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து
தூத்துக்குடி மாவட்டம்.

இது எங்க பல நாள் எதிர்பார்ப்பு...

"நான், என் குடும்பம் எல்லாமே என் மாமனார் மாமியார் காலத்துலேருந்தே இங்கதான் குடியிருக்கோம். எனக்குக் கல்யாணமாகி நுப்பது வருஷம் ஆய்டிச்சி. இவ்ளோ நாளா எங்க வீட்டுக்குனு பட்டா இல்ல. அந்தப் பட்டாவ வாங்க நாங்க ரொம்ப கஷ்டப்பட்டுட்டு இருந்தோம். எங்க ஊரு முனிசீப்பு சர்வையரு வந்து, எங்க வீட்ட அளந்து பட்டா குடுத்து, அதக் கம்ப்யூட்டர்லயும் ஏத்திக் குடுத்துட்டாங்க. இதெல்லாம் நடக்கக் காரணமா இருந்த முதலமைச்சர் ஸ்டாலின் ஐயாவுக்கு, எங்க குடும்பத்துச் சார்புல நன்றி சொல்லிக்குறேன்."

திருமதி. ***மின்னல் கொடி பழனிச்சாமி,***
சௌதாபுரம் வட்டம், சேலம் மாவட்டம்..

எங்களுக்குத்தான் தெரியும் இது எப்படிப்பட்ட உதவினு!

“நான் இந்த ஏரியாலதான் இருவது வருஷம் இருக்கேன். நாங்க பட்டாக்காக அலயோ அலன்னு அலஞ்சுருக்கோம். ஏன்னா, நாங்க குடியிருக்கிற இடம் முதல்ல பாறை புறம்போக்காக இருந்துச்சுனும், அதுக்கப்புறம் நத்தம் புறம்போக்காக மாறிருச்சுன்னும் சொன்னாங்க. இதுலதான் என்னையும் சேர்த்து 842 பேருக்கும் பட்டா கொடுத்தாங்க. ரொம்ப நாள் கழிச்சு இந்த ஆட்சியிலதான் எங்களுக்குச் சரியான பட்டா கெடைச்சிருக்கு.”

திருமதி. ***சஹீர் பானு,***
பிள்ளையார்புரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

கனவை நனவாக்கிய பட்டா

“நான், என் குடும்பத்தோட இருபத்தஞ்சு வருஷமா இங்க வாழ்ந்துட்டு வரேன். நான் ஒரு நாதஸ்வரம் வித்வான். விசேஷங்கள்ல வாசிச்சுதான் என் குடும்பத்த காப்பத்துறேன். இப்பவர, நான் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்துலதான் குடிச போட்டு இருக்கேன். இப்போ ஸ்டாலின் ஐயா ஆட்சில பட்டா கொடுத்துருக்காங்க. அதேமாதிரி, கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலமா வீடும் கட்டி முடிச்சிருக்கோம். இனி எங்களுக்குத் தேவைனா Bankல Loanஉம் வாங்கலாம். இந்த ரெண்டும் கெடைச்ச மகிழ்ச்சியில திக்குமுக்காடிப்போயிட்டோம்.”

திரு. **சங்கர்,**
வீரானந்தபுரம், கடலூர் மாவட்டம்.

அரசாணை நிலை எண்.97 (ம) 205

சிரமப்பட்டுட்டு இருந்து எனக்கு ஆறுதலா வந்த பட்டா

“நானும், என் குடும்பமும், இந்த அரசு புறம்போக்கு நெலத்துலதான் 35 வருஷமா வீடுகட்டி வாழ்ந்துவரோம். என் கணவர் இறந்ததுக்கு அப்புறம், என்னோட மூணு பொம்பளப் புள்ளைகளையும் நான் மட்டும் தனியா வளத்திட்டுவரேன். நான் விவசாய கூலி வேலைக்குதான் போறேன். வருமானமும் கம்மி. இதுக்கெடையில, என் வீட்டுக்குப் பட்டா கேட்டு பலமொற மனு கொடுத்தும், பட்டா கெடைக்காமயே இருந்துச்சு. இப்போ, முதலமைச்சர் ஐயா போட்ட உத்தரவால எங்களுக்குப் பட்டா கெடைச்சுருச்சு. சிரமப்பட்டுட்டு இருந்த எனக்கு ஒரு பெரிய ஆறுதலா அமஞ்சுருக்கு இந்தப் பட்டா.”

திருமதி. **ரத்னா,**
ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

பல்லாண்டு கால தடைய நீக்கினாரு முதலமைச்சர்

“நான் கடந்த 16 வருஷமா, சிமெண்ட் ஷீட்ல வீடு கட்டி நானும், என் பிள்ளைகளும் வாழ்ந்துவரோம். இந்த எடம் மாநகராட்சியில, கோட்டை மலை காப்புக் காட்டுக்குப் பக்கத்துல இருக்குறதால, வன அதிகாரிக பட்டா வழங்க ஒத்துக்கல. அதனால, எங்களுக்குப் பட்டா இல்லனு அரசுலயும் சொல்லிட்டாங்க. 60 வருஷமா இருந்த இந்தத் தடையாணைய இப்போ ஸ்டாலின் ஐயா ஆட்சியிலதான் நீக்கினாங்க. நான் உட்பட, எங்க ஏரியாவுல இருக்குற 365 பேருக்கும் பட்டா கெடைச்சுருக்கு.”

திருமதி. **பவளக்கொடி**
நேரு நகர், சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம்..

வேறென்ன வேணும், இதுக்கு மேல!

"நாங்க இருபத்தெட்டு வருஷமா இந்த இடத்துல இருக்குறோம். நான் ஒரு விதவை, என் பொழப்புக்குப் பெருசா வழியில்லாதால வாடகையும் கட்ட முடியல. அதனால வீட்டுக்குப் பட்டா வேண்டி பலமொற எழுதிபோட்டோம். நம்ம முதல்வர் ஐயா புண்ணியத்துல எங்களுக்கு இப்போ பட்டா வழங்கிருக்காங்க. இத வெச்சு எங்க வாழ்க்கைய நல்லபடியா அமச்சுப்போம். சொல்ல வார்த்தை இல்ல."

திருமதி. ***செல்வராணி,***
முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்.

கஷ்டமான காலத்துல பட்டா கிடைச்சுருக்கு

“என் வீட்டுக்காரருக்கு வாய் பேச முடியாது, அதனால வேலைக்கும் போக முடியாத சூழ்நிலைல ஒத்த ஆளா வேலைக்குப் போய் கஷ்டப்பட்டு பசங்கள படிக்கவச்சுட்டுருக்கேன். முன்னாடி ராமாபுரம் ஏரி ஓரத்துல இருந்தப்போ மழை வெள்ளத்துல ரொம்ப கஷ்டப்பட்டோம். எங்களுக்கு எடமும் பட்டாவும் வேணும்னு பல வருஷமா கோரிக்கைய வெச்சோம். அதுபடி, நம்ம முதலமைச்சர் ஐயா கையால 11.03.2025 அன்னிக்குப் பட்டா கெடச்சுது. இப்போ பட்டா கெடச்சுருக்க எடத்துல எந்தப் பிரச்சினையும் இல்லாம நிம்மதியா இருக்கோம்.”

திருமதி. ***மஞ்சுளா,***
பெருங்களத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்.

எம் பசங்க நல்லாருப்பாங்க...

என் வீட்டுகாரர் இல்லாம முப்பத்தஞ்சு வருஷமா, எந்தவொரு வாழ்வாதாரமும் கெடையாது. இதுவரைக்கும் பட்டாவே வரல. வருமா வராதான்ற சந்தேகத்துலயே இருந்தோம். இப்போ பட்டா வந்துருச்சு. எனக்கப்புறம் எம் பசங்களும் நல்லபடியா இருப்பாங்க."

திருமதி. **லதா,**
செம்மண்டலம், கடலூர் மாவட்டம்.

தணிந்தது... எங்கள் தவிப்பு!

“இருளர் சமூகத்துல இருக்குற எங்களுக்கு நிலையான வாழ்க்க கெடையாது. நாங்க ஒரு வேலைக்குப் போகணும்னாகூட பல இடங்களுக்கு அலைய வேண்டி இருக்கும். இப்போ எங்களுக்கு நெரந்தரமான பட்டா கெடைச்சுருக்கு. இந்தப் பட்டா கெடைச்சதுக்கு அப்புறம், நாங்க இருக்குற எடத்துலயே நிலையான வேலைய பாத்துக்க உதவிய இருக்கும்.”

திருமதி. **மல்லிகா,**
விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.

அரசாணை நிலை எண்.97 (ம) 205

கடைசியா எங்கள ஒருத்தர் கண்டுக்கிட்டாரு

“எழுவது வருஷமா இங்க இருக்குறோம். எவ்வளவோ பேர் ஆட்சிக்கு வந்தாங்க, அவங்க கைலலாம் மனு கொடுத்தோம். அவங்க எங்களை என்னனுகூட கண்டுக்கல. இப்போ முதலமைச்சர் ஐயா வந்து எங்களுக்குப் பட்டா குடுத்துருக்காரு. அந்தப் பட்டாவ வச்சு லோன் வாங்கி வீட்டைக் கட்டணும். அதுல நானும் என் புள்ளைங்களும் சந்தோஷமா இருப்போம்.”

திருமதி. ***சாந்தி,***
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை மாவட்டம்.

சொந்த வீட்டுக்குப் போறோம்...

“நாங்க கூலி வேல செஞ்சுதான் பொழக்கிறோம். பதினஞ்சு வருஷமா காத்து, மழைனு இந்த ஓலை வீட்லதான் கொழந்த குட்டிகளோட வாழ்ந்துட்டு இருந்தோம். பட்டா உத்தரவாதம் இல்லாம இருந்துச்சு, ரொம்ப எதிர்பார்த்து காத்திருந்தோம். அந்தச் சமயத்துல, நம்ம முதலமைச்சர்தான் இருந்த இடத்துக்குப் பட்டா குடுத்துருக்காரு. எங்களுக்கு ஒரு நெரந்தர address கெடைச்சுருச்சு. இனி இந்த வீட்ல நிம்மதியா வாழப்போறோம்.”

திருமதி. **முத்தாலம்மாள்,**

பொன்விளைந்த களத்தூர் கிராமம், திருக்கழுகுன்றம்,

செங்கல்பட்டு மாவட்டம்.

அரசாணை நிலை எண்.97 (ம) 205

பட்டா: பல தலைமுறையின் கனவு

“நாங்க, தலமுற தலமுறையா இந்த ஊர்லதான் இருக்கோம். இந்த அரசுப் பொறம்போக்கு நெலத்துலதான் முப்பது வருஷத்துக்கு மேல குடியிருக்கோம். பல வருஷமா பட்டா இல்லாம இருந்த நாங்க, ‘உங்கள் கனவை சொல்லுங்கள்’ திட்டத்துல எங்க தேவைய சொன்னோம். அதுக்கப்புறம், நம்ம தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவால எங்களோட பல நாள் பிரச்சினை முடிவுக்கு வந்துருச்சு. எங்களுக்கு மட்டுமில்லாம எங்க கிராமத்துல 49 பேருக்குப் பட்டா கெடைச்சுருச்சு. இது எங்க பல தலமுறையோட கனவு.”

திருமதி. ***கவிதா,***
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

எங்க அம்மாவோட ஆசை நிறைவேறிருச்சு

“நான் ஒம்பதாம் வகுப்பு படிக்குறேன். என் அக்கா, கௌரி. நாங்க ரெண்டுபேரும்தான். எங்களுக்கு அப்பா, அம்மா இல்ல. எங்க பெரியம்மாவிங்கதான் வளத்திட்டுருக்காங்க. மொத எங்க தாத்தா காலத்துலலாம் பட்டாவே கிடைக்கல, எங்க அம்மா இருந்தப்பயும் கிடைக்கல. ஆனா, இந்த ஆட்சிலதான், அதும் எங்க காலத்துல பட்டா கெடச்சுருக்கு.”

செல்வன். **புகழ்,**
கோயம்புத்தூர் மாவட்டம்.

எங்க இடமே எங்களுக்குக் கிடைச்சிருச்சு

“நாங்க பன்னிரண்டு வருஷமா இதே எடத்துல இருக்கோம். ரொம்ப நாள் பட்டாக்கு முயற்சி பண்ணோம். பட்டா கெடைக்குமா, கெடைக்காதா என்ற சந்தேகத்துலயே இருந்தோம். ஒரு நாள் எங்களுக்குப் பட்டா Sanction ஆகியிருக்குனு சொன்னாங்க. நல்ல வேளையா எங்கள வேற எங்கயும் அனுப்பாம, நாங்க இருக்குற எடத்துலேயே பட்டா போட்டுக் கொடுத்துட்டாங்க. இது எங்களுக்குப் பல விதத்துல உதவியாக இருக்கப்போகுது. பட்டாக்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி!”

திருமதி. **அமுதா,**
சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

எங்க வாழ்க்கைக்கான முகவரி கொடுத்துருக்கு அரசு

"என் சொந்த ஊர், மயிலாடுதுறை. திருநங்கைங்றதால அப்பா என்னய வீட்டுல சேர்த்துக்கல. கோவத்துல என்னோட பி.எஸ்.சி கேட்டரிங் டிகிரி சான்றிதழையும் எரிச்சுட்டாரு. ஊர விட்டுவந்து, பத்து வருஷத்துக்கு மேல அரசு வண்டிப்பாதை பொறம்போக்குலதான் குடியிருக்கேன். கிடைக்கிற கூலி வேலைய செஞ்சு, சீட் போட்டு வீடு கட்டிருக்கேன். இது பொறம்போக்குங்றதால, காலிசெய்ய சொல்லிருவாங்களோனு பயந்தேன். இப்போ, அரசு மூலமா வீட்டுமனைப் பட்டா கெடைச்சுருக்கு. இங்க என்னய மாதிரியே 10 திருநங்கை வீடு கட்டி வாழ்ந்துவரோம். ரொம்ப சந்தோஷம்."

திருநங்கை. ***பிரஸ்திகா,***
சத்தியமங்கலம், திருநங்கையர்புரம், ஈரோடு. மாவட்டம்

அரசாணை நிலை எண்.97 (ம) 205

இந்தப் பட்டா மூலமா அடுத்த கட்டத்துக்குப் போவோம்

"நாங்க 30 வருஷமா இங்கு இருக்குறோம். எங்களுக்குக் கழிவுநீர், குடிநீர், மின்சாரம், பட்டானு எதுவுமே கிடைக்கல. இப்படியான நேரத்துல நாங்க கலெக்டர் அம்மாட்ட மனு கொடுத்தோம். அப்புறம் முதலமைச்சர் சிறப்புத் திட்டத்துல எங்களுக்குப் பட்டா கெடைச்சுது. இந்தப் பட்டாவை வச்சு வீட்டுக்கடன் வாங்க ஏற்பாடு செய்யப்போறோம்."

திருமதி. **எலிசபெத்,**
டி.வி. நகர், சென்னை மாவட்டம்.

என் காலத்துலயே கிடைச்சது மகிழ்ச்சி!

“முப்பது வருஷமா நானும் என் ரெண்டு பசங்களும் இந்த ஏரியாவுலதான் குடியிருக்கோம். ரொம்ப கஷ்டப்படுற குடும்பம்தா. இந்த எடத்துக்கும் பட்டா இல்லாமதா இருந்துச்சு. பலமுற பட்டா கேட்டும் கெடைக்கல. என் காலத்துல சொந்தமுனு வீடு இல்லாம வாழ்ந்துட்டேன். என் பசங்களுக்கும் அதே நிலையானு நினச்சேன். இப்போ அரசு இலவசமா நெரந்தரப் பட்டா கொடுத்திருக்கு. இந்த உதவி எங்களுக்கு ஒரு ஊக்கத்த கொடுத்துருக்கு.”

திருமதி. ***செல்வி,***
கலைஞர் நகர், தூத்துக்குடி மாவட்டம்.

உத்தரவாதம் இல்லாத எடம், இப்போ உறுதியாகிருச்சு!

"நாங்க முப்பது வருமா இங்கதான் வசிச்சுவறோம். ஆனா, பட்டா இல்லாதனால எங்களுக்கு இங்க வசிக்கிறதுக்கான எந்த உத்தரவாதமும் இல்லாம இருந்துச்சு. இது சம்பந்தமா அரசுகிட்ட கோரிக்கை வச்சோம். ரொம்ப நாளா பட்டாக்காக காத்துட்டுருந்தோம். இப்போ தமிழ்நாடு அரசு சார்புல, முதலமைச்சர் ஸ்டாலின் ஐயா உத்தரவின் பேர்ல எங்களுக்கு இலவச பட்டா கொடுத்துருக்காங்க. இனி வீடு பத்தின கவல இல்ல. இது எங்களுக்கு ரொம்ப உதவியா இருக்கும். எங்க குடும்பத்துல எல்லாருக்கும் சந்தோஷம்."

திரு. ***மாரிச்செல்வம்,***
சுடலையாபுரம், மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து,
தூத்துக்குடி மாவட்டம்.

எங்க கவல முடிவுக்கு வந்துருச்சு!

“நாங்க நாப்பது வருஷமா இங்கதான் வாழ்ந்துட்டு இருக்கோம். பட்டா வேண்டி பல வருஷமா மனு கொடுத்தோம். இதுவர எங்களுக்கு எதுவும் கிடைக்கல. இப்போ, நம்ம முதலமைச்சர் போட்ட ஆணையால, எங்களுக்குப் பட்டா கெடச்சுருக்கு. பட்டா கிடைக்காம போய்டுமோ, என் குழந்தைங்களுக்கு எந்த ஆதரவும் இல்லாம போய்டுமோனு ரொம்ப பயந்தேன். இப்போ அந்தக் கவல இல்ல.”

திரு. **ஜலகேது,**
சென்னை மாவட்டம்.

எங்க பாரமே கொறஞ்சுருக்கு!

“நாங்க பதினைந்து வருஷமா இங்கதான் இருக்கோம். ஆனா, எங்களுக்குப் பட்டா இல்ல. ரொம்ப காலமா பட்டாக்கு முயற்சி பண்ணோம். எப்படியோ, இந்த வருஷம் அரசு அதிகாரிக உதவியால இந்தப் பட்டா வாங்க முடிஞ்சுது. இதால எங்க Family ரொம்ப சந்தோஷமா இருக்கு. எங்க வாழ்க்க அடுத்த கட்டத்துக்குப் போக இந்தப் பட்டா உதவும்னு நம்புறோம்.”

திருமதி. **செங்கோடு செல்வி,**
சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

போராட்டங்களால் கிடைத்த பொக்கிஷம்!

“நான் ஒரு தூய்மைப் பணியாளர். இதே ஏரியால பொறந்து, வாழ்ந்துட்டுருக்கேன். எங்க தாத்தா, காலத்துலேர்ந்தே பட்டாக்குப் போராட்டமாவே இருந்துச்சு. பட்டா வேணும்னு போராட்டம் பண்ணுவோம். இருந்தாலும் பட்டா, கனவாவேதான் இருந்துச்சு. எங்கள வெளியேற சொல்லிட்டே இருந்தாங்க. போராட்டத்துக்குப் போம்போதெல்லா வீட்ட இடிச்சுருவாங்கனு பயமுறுத்தினாங்க. இந்த ஆட்சியில, சிறப்புத் திட்டத்துல வீட்டோடயே பட்டா கொடுத்துருக்காரு ஸ்டாலின் ஐயா. இனி நான் பொறந்த ஊர்லேருந்து என்ன யாரும் வெளியேற சொல்ல முடியாது.”

திருமதி. **வடிவு,**
ரங்கபுரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

பட்டா: ஏழைகளுக்கு வாழ்நாள் கனவு

“நான் உப்பளத்துல வேல பாக்கேன். இந்த எடத்துக்கு நான் 1993ல வந்தேன். 33 வருஷம் ஆச்சு. பட்டாவுக்காக பலமுற ஏற்பாடு பண்ணோம், இதுவர கிடைக்கல. இப்போ, ஸ்டாலின் ஐயா ஆட்சி வந்ததக்கு அப்புறம்தா எங்களுக்குப் பட்டா கிடைச்சுருக்கு. இது எங்கள போல ஏழைகளுக்கு வாழ்நாள் கனவு. இதுக்காக அரசு அதிகாரிகளுக்கும், முதலமைச்சர் ஐயா அவர்களுக்கும் நன்றி தெரிவுச்சுக்குறேன்.”

திரு. ***மனோகரன்,***
மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து, தூத்துக்குடி மாவட்டம்.

அரசாணை நிலை எண்.97 (ம) 205

எங்க வாழ்க்கைய மாத்தின ஒரு அறிவிப்பு

“நான் இங்க முப்பது வருஷத்துக்கு மேல இந்த வண்டிப்பாதை பொறம்போக்குலதான் என் குடும்பம், குழந்தைகளோட இருக்கேன்யா. எங்களுக்குனு உரிமையாகச் சொல்ல எதுவுமில்ல. வாழ்ந்துவர இடத்துக்குப் பட்டாவும் இல்ல. பட்டா வேணும்னு பல காலமா கேட்டுட்டுருந்தோம்யா. இப்ப நம்ம முதலமைச்சர் ஸ்டாலின் ஐயாவோட அறிவிப்பு மூலமா, ஒருமுறை சிறப்பு வரன்முறைப் பட்டா திட்டத்துல எங்களுக்கும் பட்டா கெடைச்சுருக்கு. இது எதிர்காலத்துல எங்களோட பல தேவைகள பூர்த்தி செஞ்சுக்க உதவியா இருக்கும்.”

திருமதி. **சொர்ணம்,**
அவனியாபுரம், மதுரை மாவட்டம்.

நீலகிரி பழங்குடியின மக்களுக்குப் பட்டா வழங்கல்

பிரச்சினை

நீலகிரி மாவட்டத்தில், அரசாணை எண்.1205, வருவாய்த்துறை நாள். 27.10.1992–இன்படி வீட்டுமனை ஒப்படைக்கு தடை உத்தரவு அமலில் இருந்தது. இதனால் இருளர், குரும்பர், பணியர், காட்டுநாயக்கர், தோடர், கோத்தர் போன்ற பல்வேறு பழங்குடியின மக்களுக்கு அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டாக்களின்றி குடியிருந்துவந்தனர். இதனால் அவர்கள் வீடுகளை மேம்படுத்திடவும், அடிப்படை வசதிகள் மற்றும் வங்கி கடன் பெற முடியாமலும் பல ஆண்டுகளாக தவித்துவந்தனர்.

தீர்வு

33 ஆண்டுகளாக இருந்த தடைகள் நீங்கி அவர்கள் வாழ்க்கை மேம்பட அரசாணை நிலை எண்.170 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள். 04.04.2025 அன்று வெளியிடப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1018 பழங்குடியின மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ABSTRACT

Relaxation of Ban order – The Nilgiris District - 1018 families residing in Unobjectionable Poramboke land – Relaxing of the Ban order imposed in G.O.(Ms)No.1205, Revenue Department, Dated 27.10.1992 – Orders - Issued.

Revenue and Disaster Management Department,
Land Disposal Wing, LD 1(2) Section

G.O.(Ms) No.170 — **Dated: 04.04.2025**
குரோதி வருடம், பங்குனி 21
திருவள்ளுவர் ஆண்டு 2056

Read:

1. G.O.(Ms.) No.1205, Revenue Department, Dated 27.10.1992.
2. G.O.(Ms.)No.764, Revenue and Disaster Management Department, Dated 11.12.2020.
3. From the District Collector, Nilgiris Letter No.U3/372/2025, Dated 18.03.2025 and 24.03.2025.
4. From the Commissioner of Land Administration, Letter No.F1/9969662/2025, dated 29.03.2025 and 02.04.2025.

*****

ORDER:

In the Government Order first read above, order were issued for assignment of House Site Patta in Nilgiris District.

2. In the Government Order second read above, the Government have constituted a committee headed by the Commissioner of Land Administration with the following members to relax the ban orders issued in the Government Order first read above:-

1. Commissioner of Land Administration	-	Chairman
2. Commissioner of Adi-Dravidar Welfare	-	Member
3. Principal Chief Conservator of Forest	-	Member
4. Director of Survey & Settlement	-	Member
5. Director of Tribal Welfare	-	Member
6. Representative of Law Department	-	Member
7. Commissioner of Disaster Management	-	Member

3. In the letters third read above, the District Collector, The Nilgiris District has sent a proposal for relaxation of ban imposed by the G.O.(Ms)No.1205, Revenue

5

Government Schemes (i.e PMAY, PM-JANMAN) in the proposed Unobjectionable Government lands to be regularized. Further, most of the Unobjectionable Government lands to be regularized are coming under category of Natham lands under various types i.e. Paniyar Natham, Kurumbadi Natham, Reserved for Hill Tribes Area and other types of Government poramboke lands such as Anadheenam, Tharisu, Unassessed Waste Dry.

ii) Hence, the Committee Members have unanimously agreed and recommended the proposal sent by the District Collector, Nilgiris District towards issuance of house site patta to 1018 Scheduled Tribes people in The Nilgiris District.

7. The Government after careful examination, have decided to accept the proposal of the District Collector, The Nilgiris District, which has also been recommended by the Commissioner of Land Administration based on the decision taken by the Committee meeting held on 02.04.2025 for relaxing the ban orders issued in G.O.(Ms)No.1205, Revenue Department, dated 27.10.1992 so as to grant house site patta to 1018 Scheduled Tribe Families who have been residing in Unobjectionable Poramboke lands for more than 10 years.

8. The Commissioner of Land Administration and the District Collector, The Nilgiris District are requested to take further action as per the orders issued in paragraph 7 above and to make necessary changes in Revenue Records within a period of one month.

(BY ORDER OF THE GOVERNOR)

P. AMUDHA
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

To
The Commissioner of Land Administration, Chepauk,
Chennai-600 005.
The District Collector, The Nilgiris District.
Copy to:
The Hon'ble Chief Minister Office, Secretariat, Chennai-600 009.
The Hon'ble Deputy Chief Minister Office, Secretariat, Chennai-600 009.
The Personal Assistant to Hon'ble Minister
(Revenue & Disaster Management), Secretariat, Chennai-600 009.
The Private Secretary to Chief Secretary to Government,
Secretariat, Chennai-600 009.
The Principal Private Secretary to Additional Chief Secretary to Government,
Revenue and Disaster Management Department, Secretariat, Chennai-600 009.
Stock File / Spare Copy.

// FORWARDED BY ORDER //

SECTION OFFICER

7. The Government after careful examination, have decided to accept the proposal of the District Collector, The Nilgiris District, which has also been recommended by the Commissioner of Land Administration based on the decision taken by the Committee meeting held on 02.04.2025 for relaxing the ban orders issued in G.O.(Ms)No.1205, Revenue Department, dated 27.10.1992 so as to grant house site patta to 1018 Scheduled Tribe Families who have been residing in Unobjectionable Poramboke lands for more than 10 years.

பட்டா கிடைச்சது சந்தோஷம், ரோடும் வேணும்!

“எனக்கு அம்பது வயசுக்கு மேல ஆகுது. நாங்க பொறந்து வளந்ததெல்லாம் இங்கதான். நாங்க இப்படியேதான் இருக்கோம். கலைஞர் ஆட்சியில மின்சாரம் கொடுத்தாரு, TV கொடுத்தாரு. இப்போ ஸ்டாலின் ஐயா பட்டாவும் கொடுத்துட்டாரு. சந்தோஷம். ஆனா இங்க Main பிரச்சினை Roadதான். அதையும் சரி பண்ணிக் கொடுத்தா இன்னும் சந்தோஷம்.”

வள்ளி & பழனிசாமி,
செரியன் கோம்பை, குன்னூர்,
நீலகிரி மாவட்டம் .

அரசாணை நிலை எண். 170

இப்போதான் நல்லா தூங்க முடியுது!

“நான் நுப்பது ஆண்டுகளா இங்க வசிச்சுட்ருக்கேன். ரொம்ப காலமா ஒரு குடிசைலதான் இருந்தோம். மழை இல்ல, எந்தொரு காலமும் சரி, கஷ்டம்தான். சீசன் Timeல யானை தொல்லை. அரிசி சாப்பாடு Smell-க்கு வரும். குடிசைங்கறதால ரொம்ப சேதம் பண்ணிடும். இந்த Timeலதான் கரடி, பன்னிலாம் அதிகமா நடமாடும். எங்களுக்குப் பட்டா கெடச்சது மகிழ்ச்சி. ஏன்னா, PM JANMAN திட்டத்துல இந்த வீடு கட்டனதுக்கு அப்றம், தூங்குறதுக்கோ, வெளிய போக வரவோ ரொம்ப வசதியா இருக்கு. நாங்க இப்போ நிம்மதியா இருக்கோம்.”

திருமதி. ***ஜெயமாலா,***
கரிக்கியூர், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.



வாழ்ந்த எடமே சொந்தமானதுல சந்தோஷம்!

“நாங்க இருளர் சமூகம். அஞ்சு தலமுறையா எங்க தாத்தா, பாட்டி காலத்துலேருந்து இங்கயேதான் இருக்கோம். எங்களுக்கு இந்த எடத்துவிட்டுப் போறதுக்கு இஷ்டமே இல்லிங்க. நாங்க அப்படியே குடிச போட்டு வாழ்ந்துட்டுவந்தோம். இப்போதான், நம்ம ஸ்டாலின் ஐயா ஆட்சியில வீடு, பட்டா எல்லாம் வந்துருக்கு. இங்க ஒரு ரோடு மட்டும் போட்டுக் கொடுத்துட்டா இன்னும் நல்ல இருங்குக சார்.”

துளசி & பாலன்
செரியன் கோம்பை, குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

அரசாணை நிலை எண். 170

இனி பாதுகாப்பா இருப்போம்!

"நாங்க பால் குரும்பர் இனத்தச் சேர்ந்தவங்க. எங்க அப்பா, அம்மா காலத்தலேருந்து இங்கதான் நாப்பது வருஷமா இருக்கோம். குடிசை வீடுதான். எந்தப் பாதுகாப்பும் இருக்காது. இவ்வளவு நாள் பட்டா இல்லம இருந்தோம். இப்போ எங்களுக்குப் பட்டா குடுத்துருக்காங்க. அரசு, பாதுகாப்பா இருக்க வீடும் கட்டித் தராங்க. இதனால நாங்க ரொம்ப சந்தோஷமா இருக்கோம்."

செல்வி. **அனிதா,**
சின்ன குறும்பாடி, குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

அரசாணை நிலை எண். 170

எங்களுக்கு எந்தக் கவலையும் இல்ல!

“ஐயா, இந்தச் செரியான் கோம்பையில குடியிருக்கோங்க. அம்பது வருஷமா பட்டா இல்லாம ரொம்ப சிரமப்பட்டோம்ங்க. இப்போ பட்டா குடுத்ததும் கொஞ்சம் சிரமம் இல்லங்க. இந்த வீட்டுக்கு அம்மா Periodல Current இலவசமா குடுத்தாங்கங்க. இப்ப ஸ்டாலின் ஐயா வந்து பட்டா குடுத்துருக்காருங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கோங்க.”

திரு. **சின்னரங்கன்,**
செரியான் கோம்பை, குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

பட்டா வழங்கல் (மே 2021 டிசம்பர் 2024 வரை)

நான்கு வருடங்களில் – 07.05.2021 முதல் 31.12.2024 வரை – வழங்கப்பட்ட பட்டாக்களின் விவரங்கள்:

சொந்த வீடு என்பது பல்வேறு நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களின் கனவு. உணவு, உடை மற்றும் இருப்பிடம் பல மக்களுக்கு அடிப்படை தேவைகளாக இருக்கும்போது வசிப்பதற்கு வீடுகூட இல்லாமல் பல குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். பட்டா வழங்குவதன் மூலம் ஏழை எளிய மக்கள் 'கலைஞர் கனவு இல்லம்', 'அனைவருக்கும் வீடு திட்டம்' போன்ற திட்டங்களின் மூலமாக வீடுகளைக் கட்டிப் பயன்பெறுவதற்குப் பேருதவியாக இருக்கும். வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து, பல்வேறு திட்டங்களின் மூலம் நடுத்தர மக்களின் குறைகளுக்குத் தீர்வுகண்டுள்ளது.

சாதனைகள்

- *காலி மனை மற்றும் வீடுகட்டி குடியிருந்துவரும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 3,42,190 இணையவழிப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *கிராமக் கணக்குகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 40,258 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கு 55,957 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *வருவாய் நிலை ஆணை எண்.21-ன்படி 94,740 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *ஊரகப்பகுதிகளில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் மக்களின் நிலங்களை வரன்முறைப்படுத்தி 94,484 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 3,99,105 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*
- *மேற்கண்ட 9 இனங்களின் வாயிலாக, மே 2021 முதல் டிசம்பர் 2024 வரை 10,26,734 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*

நான்கு வருடங்களில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை (மே 2021 முதல் டிசம்பர் 2024 வரை)

வ. எண்	வகுப்பு வாரியாக வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
1	ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துறை (வீடுகட்டி குடியிருப்போர்)	182895
2	ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துறை (காலிமனை)	89852
3	பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (வீடுகட்டி குடியிருப்போர்)	31978
4	பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (காலிமனை)	37465
5	கிராமக் கணக்குகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டவை	40258
6	விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டா	55957
7	வருவாய் நிலை ஆணை.எண்.21 -ன் கீழ் வழங்கப்பட்ட பட்டா	94740
8	அரசாணை எண்.318 -ன் படி வரன்முறைப்பட்டா	94484
9	நகர நிலவரித் திட்டப் பட்டா	399105
மொத்தம்		**1026734**

ஆதிதிராவிடர் இ-பட்டா

இது வீடல்ல, எங்க வாழ்க்க...

“ரொம்ப காலமா வீடில்லாம கஷ்டத்துல இருந்தோம். ஒரே வீட்டுல நாங்க 4 குடும்பம் இருந்தோம். அங்க இருக்க வசதி இல்லாம கஷ்டப்பட்டுட்டு இருந்த சமயத்துல, இடம், பட்டாவோட கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலமா, வீடையும் கொடுத்துருக்காங்க. இது வெறும் வீடல்ல, எங்க வாழ்க்க...”

திருமதி. ***தமிழரசி,***
கிளிமங்கலம், கடலூர் மாவட்டம்.

எதிர்பார்க்கல ஆனா நடந்துருச்சு...

“நான் சின்னப் பிள்ளையில இருந்து இங்க இருந்து வரேன், நான் கல்யாணமாகி இந்த வூட்டுக்கு வரேல எனக்கு இருபது வயசு. நாங்க இவ்வளவு நாள் பட்டாவுக்கு முயற்சி பண்ணியும் வரல. அம்பத்தஞ்சு வருஷா இந்த வீட்ல இருக்கேன், நான் இருக்கும்போதே இந்த இலவச பட்டா கெடைச்சதுல சந்தோஷம்.”

திருமதி. ***சரஸ்வதி,***
கீழ தெரு, மேல சீதேவி மங்கலம், மணச்சநல்லூர்,
திருச்சி மாவட்டம்.

ஐந்து மாதங்களில் ஐந்து இலட்சம் பட்டாக்கள்

(ஜனவரி 2025 – மே 2025)

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்
202638	125983	90312	134916

ஐந்து மாதங்களில் ஐந்து இலட்சம் பட்டாக்கள்

மே 2021 முதல் டிசம்பர் 2024 வரை பல்வேறு திட்டங்களில் வருவாய் துறையின் மூலம் 10.26 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பொதுமக்கள் அதிகம் நாடும் சேவைகளான பட்டா மாற்றம், நத்தம் நிலவரிப் பட்டா போன்ற பல்வேறு பயன்களைத் துரிதமாகப் பெறுவதற்குப் பல்வேறு மாவட்டங்களில் அதிகாரிகளை அணுகி மனுக்களை அளித்தனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் விதமாக 2025ஆம் ஆண்டு, சட்டமன்றத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் '5 மாதங்களில் 5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம்' செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு இத்திட்டத்தின் கீழ் 6,29,966 பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது,

சாதனைகள்

- கிராமக் கணக்குகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட இனங்கள் மூலம் 1,62,760 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வருவாய் நிலை ஆணை எண். 21-ன் கீழ் நத்தம் பட்டா மற்றும் அரசாணை.318-ன் கீழ் 1,41,319 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அசல் நிலவரித் திட்டத்தின் கீழ் 10,026 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நகர நிலவரித் திட்டம் மூலம் 3,18,627 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- TNHB LAYOUT நிலங்களை இரயத்து என மாற்றம் செய்து 78,548 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் (TNUHDB) விற்கிரைய பத்திரங்கள் வழங்கப்பட்ட இனங்களில் 9,657 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிடர்/ பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 1,58,921 இ-பட்டா பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- டெல்டா மாவட்டங்களில், ஆதீனம்/மடம்/கோவில் நிலங்களில் குடியிருப்போருக்கு நிலத்தினைக் கையகப்படுத்தி 1,234 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சென்னை மற்றும் அதன் சூழ்ப்பகுதிகளில் (திருவள்ளூர் மாவட்டம்) ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் 2636 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனவரி 2025 முதல் செப்டம்பர் 2025 வரை 8,83,728 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்டம்பர்
137879	35878	33724	27476	94922

மொத்த பட்டாக்களின் எண்ணிக்கை: 883728

அசல் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா



வருவாய் நிலை எண்.21-ன் கீழ் வழங்கப்பட்ட பட்டா



ஓர் உதவி அதுவும் பேருதவி!

"இங்க அம்பது வருஷமா தங்கியிருக்கோம். எங்களுக்குப் பட்டா எதுவும் கிடைக்கல. எனக்கு அஞ்சு புள்ளைங்க, அதுல ஒன்னு மூள வளர்ச்சி இல்லாத புள்ள. சொந்த இடமில்லாம, ரொம்ப கஷ்டப்பட்டுட்டு இருந்தோம். இப்போ முதலமைச்சரால எங்களுக்கு ஒரு உதவி கிடைச்சு, பட்டா கொடுத்துருக்காங்க. எங்க கஷ்டத்த போக்கற மாரி சொந்தமா ஒரு எடம் கெடச்சுருக்கு."

திருமதி. ***நூர்ஜஹான்,***
மணச்சநல்லூர், திருச்சி மாவட்டம்.

வருவாய் நிலை ஆணை எண். 21

அப்போ பட்டம் இப்போ பட்டா

“கலைஞர் ஐயா மூலியமா திருநங்கைங்கிற பட்டம் கிடைச்சது. இப்போ அவர் மகன் ஸ்டாலின் ஐயா மூலியமா பட்டா கிடைச்சுருக்கு. எங்களுக்கான நலத்திட்டகள பாத்துப் பாத்து செய்யுறாரு. 10 வருஷமா வீடில்லாத இருக்கோம். இப்போ 37 பேருக்கு இலவச பட்டா வழங்கிருக்காங்க. இந்த இடத்துக்குப் பொதுமக்களால பிரச்சினை வந்தாலும், இது திருநங்கைகளுக்குனு Allot பண்ணிக் கொடுத்துருக்காரு முதலமைச்சர்.”

திருநங்கை **அஸீனா,**
பெருங்களத்தூர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

சரியான நேரத்துல கிடைச்ச பட்டா

“நாங்க கல்யாணமாகி பத்து வருஷமா வாடக வீட்ல இருந்தோம். எங்க பாப்பா Disable Child. வீட்ல ஒரு வருமானம்தான், கணவர் மட்டும் வேலைக்குப் போறாரு. பொண் குழந்தைங்றதால என்னால எங்கயும் போக முடியல. வீட்டு வாடகை, மருத்துவ செலவுனு சிரமப்பட்டோம். இந்த நேரத்துல கலைஞர் கனவு இல்லம் பத்திச் சொன்னாங்க. நாங்களும் எழுதிக்கொடுத்தோம். அதுல எங்களுக்குப் பட்டாவோட சொந்தமா வீடும் கெடைச்சிருச்சு. இதேபோல, மாற்றுத்திறனாளிகளா இருக்க 100 பேர்த்துக்கு மேல பட்டா கொடுத்துருக்காங்க. ரொம்ப Happyஆ இருக்கு.”

திருமதி. ***சஜினி,***
கவுண்டம் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துதல் (அரசாணை நிலை எண். 318)



அரசாணை நிலை எண்.318

எங்கள் மாற்றத்திற்கான முதல் படி!

“எங்க திருநங்கை அமைப்பு சார்புல பல வருஷமா, இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு போராடுறோம். இப்போ எங்க அமைப்புல இருக்க 54 திருநங்கைகளுக்கும் இலவச பட்டா கொடுத்துருக்காங்க. இது எங்க வாழ்வாதாரத்த மாற்றுவதற்கான முதல் முயற்சினு சொல்லலாம். நாங்களும் சுயதொழில் செஞ்சு, சமுதாயத்துல தலை நிமிர்ந்து வாழ இது உதவியாக இருக்கும்.”

*திருநங்கை. **சோனாலி,***
திருச்சி மாவட்டம்.

அரசாணை நிலை எண்.318

ஒருவழியா எனக்கொரு சொந்த வீடு

“நான் என் குடும்பத்தோட இருபத்தஞ்சு வருஷமா இங்க வாழ்ந்துட்டு வரேன். இது அரசு தோப்பு பொறம்போக்கு நெலத்துலதான் என் குடிசை இருந்துச்சு. நான் வீடும், பட்டாவும் இல்லாம ரொம்ப தவிச்சிட்டு இருந்தேன். அப்போ, நம்ம தமிழ்நாடு அரசுலேருந்து, முதலமைச்சர் ஸ்டாலின் ஐயா எங்களுக்குப் பட்டா வழங்கியிருக்காரு. அதுகப்புறம், எனக்கு வீடும் கட்டிக் கொடுத்தாங்க. மேலும் என் வருமானத்தை வச்சு சிரமம் இல்லாம இந்த வீட்ட கட்டி முடிச்சேன். இப்போ எனக்குனு சொந்தமா ஒரு வீடு இருக்குனு நினைக்கும்போது, ரொம்ப சந்தோஷமா இருக்கு.”

திரு. **பாஸ்கரன்,**
புவனகிரி, கடலூர் மாவட்டம்.



TNHB LAYOUT நிலங்களை இரயத்து என மாற்றம் செய்து பட்டா வழங்குதல்

ரொம்ப பெருமையா இருக்கு!

“இத்தன வருஷமா வீட்டுப் பட்டா இல்லாம, நிரந்தர எடத்த அமைக்க முடியல. அதனால ஒவ்வொரு இடமா மாறிக்கிட்டு இருந்தோம். நாங்க கஷ்டப்படறத பாத்து முதலமைச்சர் ஐயா, அவர்களால் சிறப்புத் திட்டத்துல எங்களுக்குனு நிரந்தரமா ஒரு இடம் கெடைச்சுருக்கு. அவரே 04.02.2026 அன்று பட்டா கொடுத்தாரு இது எங்க குடும்பத்துக்கே பெருமையான விஷயம். நன்றி ஐயா!”

திருமதி. **ஆண்டாள்,**
விழுப்புரம் மாவட்டம்.


ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் இ-பட்டா
30,000
28,000
26,000
24,000
22,000
20,000
18,000
16,000
14,000
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
0
10,446
8,976
13,689
17,801
19,280
29,568
17,037
7,462
5,115
13,286
22,038
12,025
5,937
16,941
6,003
14,902
28,832
25,654
11,090
17,725
28,851
6,304
9,098
8,526
13,786
12,102
6,512
2,251
11,704
2,477
8,035
13,464
19,360
4,444
17,157
15,369
17,864
அரியலூர்
இராணிப்பேட்டை
இராமநாதபுரம்
ஈரோடு
கடலூர்
கரூர்
கள்ளக்குறிச்சி
கன்னியாகுமரி
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
கோயம்புத்தூர்
சிவகங்கை
செங்கல்பட்டு
சேலம்
தஞ்சாவூர்
தருமபுரி
திண்டுக்கல்
திருச்சிராப்பள்ளி
திருநெல்வேலி
திருப்பத்தூர்
திருப்பூர்
திருவண்ணாமலை
திருவள்ளூர்
திருவாரூர்
தூத்துக்குடி
தென்காசி
தேனி
நாகப்பட்டினம்
நாமக்கல்
நீலகிரி
புதுக்கோட்டை
பெரம்பலூர்
மதுரை
மயிலாடுதுறை
விருதுநகர்
விழுப்புரம்
வேலூர்

எங்களோட சிரமம் கொறஞ்சுருச்சு...

“ஐம்பது வருஷமா இந்த வீட்டுலதான் இருக்கேன். இந்த வீட்டுக்குப் பட்டா வேணும்னு கேட்டு, இதுவர அம்பது தடவைக்கு மேல் மனு எழுதிக் கொடுத்துட்டேன். பட்டா வரவே இல்ல. இந்த முறைதான் முதலமைச்சர் திட்டத்தின் மூலமா எங்க எடத்துக்கு இலவச பட்டா வந்துருக்கு. இவ்ளோ நாளா பட்டா இல்லமா தண்ணி Line, Bankல Loanன்னு எதுமே வாங்க முடியல. கடன் கேட்டுப் போனாக்கூட, எதாவது சொந்தமா இருக்கானு கேக்குறாங்க, இனி இந்தப் பட்டாவ காட்டி கடன் வாங்கிக்க முடியும்.”

திரு. ***மாசி***
சிறுநாவலூர் கிராமம், துறையூர்,
திருச்சி மாவட்டம்.

இந்த எடம் இனிமே எங்களோடது!

“நாங்க, இருபது வருஷமா இங்கதான் வாழ்ந்துட்டு இருக்கோம். கூலி வேலதான் செய்றோம். இவ்வளவு நாள் தங்க எடம் இருந்துச்சு, ஆனா அது எங்களுதுனு சொல்ல முடியல. பட்டா இல்லாமதான் இருந்தோம். பட்டாக்காகக் கோரிக்கையும் வெச்சோம். நம்ம தமிழ்நாடு அரசு, சிறப்புத் திட்டத்து மூலமா எங்களுக்கு இலவச பட்டா கிடைச்சுருக்கு. இது மூலமா கடன ஒடன வாங்கி எங்க வாழ்வாதாரத்த பெருக்கிக்குவோம்.”

திருமதி. ***பிரியா,***
சாத்தூர், ரங்கப்பநாயக்கன்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

நிலச் சீர்திருத்தத் துறை
தமிழ்நாடு பூமிதான வாரியம்

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட, பூமிதான இயக்கத்தின் மூலம் மாநிலத்தில் 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான இயக்கத்திற்கு தானமாகப் பெறப்பட்டன. அவ்வாறு தானமாகப் பெறப்பட்ட நிலங்கள் தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்ட விதிகள், 1959-இன்படி வரன்முறை செய்யப்பட்டுவருகிறது.

பூமிதான நிலங்களைத் தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம், 1958 சட்டப் பிரிவு 19(1) மற்றும் 19(3)-இன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கருத்துருக்கள் (Proposals) பெறப்பட்டு, தமிழ்நாடு பூமிதான வாரிய கூட்டத் தீர்மானத்தின் பேரில் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்காகவோ, வீட்டுமனைகளுக்காகவோ மற்றும் பொது நோக்கத்திற்காகவோ அனுபவ உரிமை மட்டும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. பூமிதான வாரியத்தின் மூலம் கடந்த ஐந்து வருடங்களில் 53, பயனாளிகளுக்கு 55.86 ஏக்கர் நில விநியோகப் பத்திரம், 4,239 பயனாளிகளுக்கு 150.25 ஏக்கர் வீட்டுமனை விநியோகப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட வீட்டுமனை விநியோக பத்திரங்கள் விவரம்

வ.எண்.	மாவட்டம்	வீட்டு மனை விநியோக பத்திரங்களின் எண்ணிக்கை
1	இராணிப்பேட்டை	70
2	ஈரோடு	402
3	கரூர்	97
4	கோயம்புத்தூர்	763
5	தருமபுரி	80
6	திண்டுக்கல்	931
7	திருப்பூர்	1703
8	தூத்துக்குடி	47
9	நீலகிரி	70
10	பெரம்பலூர்	53
11	விருதுநகர்	23
மொத்தம்		**4239**

திரு.

ஐந்தாண்டு சாதனைகள்

'தமிழ்நாடு பொதுமக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநில அரசின் அனைத்துக் கொள்கைகளும் மக்களின் குறைகளைத் தீர்க்கும் வண்ணம் அமைந்துள்ளன' என்ற சொல்லுக்கேற்ப மக்களின் குறைகளை நிவர்த்தி செய்து பல்வேறு திட்டங்களின் கீழ் பட்டா வழங்க இந்த அரசு பல முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு சாதனைகளைப் புரிந்துள்ளது. இதனால் மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது.

சாதனைகள்

- மே 2021 முதல் டிசம்பர் 2024 நான்காண்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் 10,26,734 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஐந்து மாதங்களில் ஐந்து இலட்சம் பட்டா என்ற இலக்கை நோக்கி 8,83,728 பட்டாக்கள் 9 இனங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.
- அரசாணை 12-ன் படி சிறப்பு பிரிவின் கீழ் 1,42,588 பட்டாக்கள் சென்னை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- பூமிதான நிலத்தில் 4239 வீட்டுமனைக்கான விநியோகப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசாணை நிலை எண்.170-ன் படி ஆட்சேபனையற்ற நிலங்களில் (நீலகிரி மாவட்டம்) பழங்குடியினருக்கு 1018 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசாணை நிலை எண்.97 மற்றும் 205-ன் கீழ் சிறப்பு வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் 83009 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நகரநில அளவை மற்றும் நிலவரித் திட்டத்தின் கீழ் (அக்டோபர் 2025 முதல் ஜனவரி 2026 வரை) நான்கு மாதங்களில் மட்டும் 2,15,307 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தங்கள் வீடுகளுக்குப் பட்டா பெறுவது ஏழை எளிய மக்களின் நீண்ட கால கனவுகளுள் ஒன்று. அந்தக் கனவை நிறைவேற்றும் வண்ணம் வருவாய்த் துறை, கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு இனங்களின் கீழ் 23,56,623 பட்டாக்களை வழங்கியுள்ளது.

5 ஆண்டுகளில் 23,56,623 வீட்டுமனைப்பட்டாக்கள்



அரசு நிலங்களை மீளப்பெறுதல்

கடந்த 2021–ஆம் ஆண்டு முதல் 2026–ஆம் ஆண்டு வரை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் நிபந்தனை மீறல், காலம் கடந்த குத்தகை மற்றும் ஆக்கிரமிப்புகளில் இருந்த அரசு நிலங்களை நீதிமன்ற வழக்குகளில் வெற்றிபெற்றதன் வாயிலாக சுமார் 13,063.36/- ஆயிரம் கோடி மதிப்புமிக்க 11,096.17 ஏக்கர் அரசு நிலங்கள் மீளப்பெறப்பட்டு, பல்வேறு திட்டங்களுக்காக பிற துறைகளுக்கு அந்நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முக்கிய வழக்குகளின் தொகுப்பு

வ. எண்	வழக்கின் விபரம்	இடம்	பரப்பு (ஏக்கர்)	அரசு வழிகாட்டி மதிப்பு (கோடி)	ஆண்டு	தற்போது பயன்படுத்தும் துறை
1	மெட்ராஸ் ரேஸ் கிளப்	கிண்டி - சென்னை	160.86	5633.67	2025	தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை
2	மெட்ராஸ் ரேஸ் கிளப்	உதகமண்டலம்	54	800	2024	தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை
3	அக்ரி-ஹார்டிகல்ச்சுரல் சொசைட்டி	கத்திட்ரல் ரோடு (அண்ணா மேம்பாலம் அருகில்) சென்னை	6	100	2023	செங்காந்தல் பூங்கா- தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை
4	ஜேப்பியார் எஜுகேஷனல் டிரஸ்ட்	ஓ.எம்.ஆர். சோழிங்கநல்லூர்	91.04	530	2024	SPORTS CITY (SDAT) இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை
5	வள்ளுவர் குருகுலம்	தாம்பரம் - செங்கல்பட்டு	9.77	298.18	2023	தாம்பரம் காவல் ஆணையரகம் - உள்துறை
6	எம்.எம்.குப்தா	விமான நிலையம் அருகில் - செங்கல்பட்டு	1.54	67	2023	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்(CMRL)
7	அருணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	கத்திப்பாரா அருகில் - செங்கல்பட்டு	4.506	150	2024	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்(CMRL) / அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு
8	ஓட்டல் சரவண பவன் (பாஷ்யம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிமிடெட்	கோயம்பேடு - சென்னை	3.45	151.18	2023	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் (CMRL)
9	வி.எஸ்.பாபு (ம) தங்ஸ்ஸ்ரீ ராவ்	கொளத்தூர் - சென்னை	0.71	24	2024	கொளத்தூர் தாலுகா அலுவலகம், சிட்டிசன் சர்வீஸ் சென்டர்-(CMDA)
10	சத்யா ஸ்டுடியோஸ்	அடையாறு - சென்னை	2.15	61.34	2023	துர்காபாய் தேஷ்முக் சாலை விரிவாக்கம் - நெடுஞ்சாலைத் துறை
11	ஓட்டல் சரவண பவன் (கோகுல கிருஷ்ணன்)	ஜி.எஸ்.டி ரோடு - விமான நிலையம் எதிரில்- செங்கல்பட்டு	1.674	87.5	2025	தமிழ்நாடு எக்ஸ் சர்வீஸ்மென் கார்பிரேஷன் லிமிடெட்
12	பாண்டியன் ஓட்டல்ஸ்	மதுரை	5.9	128.62	2026	ஓட்டல் தமிழ்நாடு - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
13	சர்ச் ஆப் சவுத் இந்தியா	அரியலூர்	310.15	201	2023	மாவட்ட விளையாட்டு அரங்கம் - இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை
14	பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்(BBTC)	திருநெல்வேலி	8373	912.425	2025	வனத்துறை

15	ஜாஹீர் உசேன்	திருவண்ணாமலை	8.52	259.79	2025	டைடல் பூங்கா - தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை
16	ஜரிஸ் வேர்ஹௌசிங் பி.லிமிடெட்	மாதவரம் - சென்னை	4	47	2025	தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
17	தனபால்	விமான நிலையம் அருகில் - செங்கல்பட்டு	1.412	50	2024	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்(CMRL)
18	தூத்துக்குடி ஆல்கலைன் கெமிக்கல்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்	தூத்துக்குடி	72.41	370	2023	இந்திய அணுசக்தி துறை(11.86 ஏக்கர்) தமிழ்நாடு மின்சாரவாரியம் (19.88 ஏக்கர்) தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் -SIPCOT(40.67)
19	ட்ரைடம் போர்ட் & பவர்	நாகப்பட்டினம்	1837.88	850	2024	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
20	மவுண்ட் பிளசண்ட் சோஷியல் கிளப்	நீலகிரி	1.5	1.96	2023	Tennis Club-இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை
21	கார்த்திகேயன் ஆன்சில்லெரிஸ்	பீளமேடு - கோயம்புத்தூர்	0.67	17.51	2023	பீளமேடு காவல் நிலையம்
22	எஸ்சிஎம் சில்க்ஸ் மற்றும் சர்வதேச சொத்துக்கள் மறுசீரமைப்பு பிரைவேட் லிமிடெட்	போரூர் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி எதிரில்	42.7	400	2023	தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்-SIPCOT
23	ஜி.சி. சிவராஜ் (ம) யு.பாலாஜி (பி. எஸ்.ஜி. நிறுவனங்கள்)	கோயம்புத்தூர்	45.82	976.18	2023	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்(CMRL)
24	இயுன் மேரி வான்ஹால்ட்ரென்	செங்கல்பட்டு	1.11	55	2026	இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை(Cycling)
25	நூர்ஜகான் (ம) மணலி. ஆர். சீனிவாசன்	கிண்டி (கவர்னர் மாளிகை எதிரில்) சென்னை	4.23	261	2023	மாநில நெடுஞ்சாலை துறை தலைமை அலுவலகம்
26	செயிண்ட் பீட்டர்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி	ஆலந்தூர்- செங்கல்பட்டு	4.32	150	2023	சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்(CMRL) மற்றும் ஹஜ் கமிட்டி
27	முனியாண்டி சந்திரன்	செங்குன்றம் - திருவள்ளூர்	18.1	60	2025	தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் -SIPCOT
28	கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்(KICL)	நீலகிரி	21.39	100	2023	குன்னூர் நகராட்சி
29	சரோஜா - சிவகிரி ஜமீன்	சென்னை	2.36	180	2023	சென்னை பெருநகர மாநகராட்சி
30	செரிய புஷ்பம்	சென்னை	5	140	2024	தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
	மொத்தம்		**11,096.17**	**13063.36/-**		

நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை எண்.23-இன் கீழ் ஒன்றிய அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையத்தை வசூலித்துக்கொண்டும், வருவாய் நிலை ஆணை எண்.23A-இன் கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையமின்றியும் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

வ. எண்	வருடம்	துறைவாரியாக இனங்கள்	அரசாணைகளின் எண்ணிக்கை	பரப்பு (ஹெக்டேரில்)	நில மதிப்பு (கோடியில்)
1	2021-2022	14	25	181.99.79	403.73
2	2022-2023	19	43	289.52.61	1,033.59
3	2023-2024	14	21	10.80.48	38.34
4	2024-2025	15	31	73.52.35	143.13
5	2025-2026	41	184	2746.46.44	51,267.01
மொத்தம்		**103**	**304**	**3302.31.67**	**52,885.81**

நில உரிமை மாற்றம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2021 - 2025), வருவாய் நிலை ஆணை எண். 24-ன்கீழ், மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள் (சிட்கோ, சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்/ தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்றவை) மற்றும் மத்திய அரசு நிறுவனங்களான விமான நிலைய விரிவாக்கம், நெய்வேலி லிக்னைட் கழகம் ஆகியவற்றிற்கு அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிறுவனங்கள்	இனங்களின் எண்ணிக்கை	விஸ்தீரணம் (ஹெக்டேரில்)
தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (சிப்காட்)	55	1321.06.67
தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம். (சிட்கோ)	14	147.40.70
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம். (டிட்கோ)	21	187.74.14
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.	52	133.70.87
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB)	55	119.91.92
இதர திட்டங்கள்	287	949.92.27
மொத்தம்	**484**	**2859.76.67**

நிலம் கையகப்படுத்துதல்

மாநிலம் முழுவதும் இந்திய அரசு மற்றும் மாநில அரசு பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்கள் / வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்துவதற்காகத் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

முந்தைய நில எடுப்புச் சட்டம், 1894, திரும்பப் பெறப்பட்ட பிறகு, நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (ஒன்றிய சட்டம், 30/2013) (RFCTLARR சட்டம், 2013) தமிழ்நாடு அரிஜன நலத் திட்டங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999). தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) ஆகிய சட்டங்களின் கீழ் நில எடுப்பு செய்து இழப்பீடு நிர்ணயம் செய்யும் வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் 744 திட்டங்களில் 16,459 ஹெக்டேர் பரப்பளவிலான நிலங்கள், பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக நில எடுப்புச் செய்யப்பட்டு ரூ.26,918 கோடி தொகை நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

நில எடுப்புப் பணிகளின் விவரம் (2021-2026)

வ.எண்	நிதி ஆண்டு	இறுதி தீர்வாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் (ஹெக்டேரில்)	இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்ட விவரம் (ரூ. கோடியில்)
1	2021-2022	2978	4,554
2	2022-2023	4150	5,972
3	2023-2024	3221	5,598
4	2024-2025	3977	4,201
5	2025-2026	2133	6,593
மொத்தம்		16459	**26,918**

இரயில்வே துறைக்கு நிலமாற்றும் செய்யப்பட்ட விவரங்கள்

01.06.2021 முதல் 17.02.2026 வரை

வ. எண்	திட்டங்கள்	கோரப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்)	நிலமாற்றும் செய்யப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்)	மீதம் நிலமாற்றும் செய்யப்பட வேண்டியது (ஹெக்டேரில்)	முடிக்கப்பட்ட சதவீதம் (%)
1	திண்டிவனம் – நகரி புதிய அகல ரயில் பாதை	123.84.95	123.84.95	0	100
2	மணியாச்சி – நாகர்கோயில் அகல ரயில்பாதை இரட்டிப்பாக்குதல்	4.37.18	4.37.18	0	100
3	சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில்பாதை	7.70.67	7.70.67	0	100
4	நாகர்கோயில் – கன்னியாகுமரி அகல இரயில்பாதை இரட்டிப்பாக்குதல்	0.51.82	0.51.82	0	100
5	நாகர்கோயில் – இரணியல் அகல இரயில்பாதை இரட்டிப்பாக்குதல்	2.12.00	2.12.00	0	100
6	செங்கல்பட்டு – விழுப்புரம் புதிய அகல இரயில்பாதை	3.39.03	1.02.67	2.36.36	30
7	விழுப்புரம் – திண்டுக்கல் அகல இரயில்பாதை இரட்டிப்பாக்குதல்	34.81.96	18.04.46	16.77.50	52
மொத்தம்		**176.77.61**	**157.63.75**	**19.13.86**	**83**

இதர முன்னெடுப்புகள்

1. ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்திற்குட்பட்ட 29 கிராமங்களில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் நில ஒப்படை வழங்கப்பட்ட பட்டா நிலங்களை, தமிழ்நிலம் பதிவேடுகளில் "நிபந்தனைக்குட்பட்ட பட்டா" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நீக்கம் செய்து நிரந்தரப் பட்டாவாக மாற்றம் செய்தல்:

பிரச்சினை

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்திற்குட்பட்ட 29 கிராமங்களில், வனப்பகுதியை ஒட்டியிருந்த அரசு நிலங்கள் பட்டியலின மக்கள் உட்பட நிலமற்ற பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர பிரிவினருக்கு விவசாய பயன்பாட்டிற்காக, 1955-65 வரையிலான காலகட்டங்களில் வருவாய் நிலை ஆணை எண்.15ல் கண்டுள்ள நிபந்தனை மற்றும் இதர நிபந்தனைக்குட்பட்டு நில ஒப்படையாக வழங்கப்பட்டன. நிபந்தனைப் பட்டாக்களை கணினிமயமாக்கம் செய்யும்போது அந்நிலத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு பதிவேட்டில் 'பூஜ்ஜியம்' என மாற்றப்பட்டுள்ளதால், நில பரிவர்த்தனை செய்ய இயலாமல் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். மேற்படி நிபந்தனையை நீக்கி, நிரந்தர பட்டா வழங்க வலியுறுத்தி பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அரசைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.

தீர்வு

அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு ஆய்வு செய்து, 60 ஆண்டுகளாக நீடித்த, நீண்ட கால பிரச்சனைக்கு தீர்வுகாணும் விதமாக, அரசாணை எண். 885 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 24.11.2025ன்படி தகுதியான இனங்களுக்கு தமிழ்நிலம் பதிவேடுகளில் "நிபந்தனைக்குட்பட்ட பட்டா" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நீக்கம் செய்து பட்டா வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால், ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் வட்டத்திற்கு உட்பட்ட 29 கிராமங்களில் உள்ள சுமார் 6000 ஏக்கர் நிலங்களுக்கு நிபந்தனைக்குட்பட்ட பட்டா என்றுள்ளதை நீக்கம் செய்யப்பட்டு சுமார் 2680 நில உடைமைதாரர்கள் பயன்பெற உள்ளனர்.

2. ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை மற்றும் கீழ்பவானி நீர்ப்பாசன திட்டங்களின் பேரில் வழங்கப்பட்ட திட்ட நிபந்தனைப் பட்டாக்களை நிரந்தர பட்டாவாக மாற்றம் செய்தல்

பிரச்சினை

ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் மற்றும் கீழ்பவானி நீர்பாசனத் திட்டங்களின் கீழ், திட்ட நிபந்தனையுடன் 1937-ம் ஆண்டில் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இப்பட்டாக்களை நிரந்தரப் பட்டாவாக மாறுதல் செய்து வழங்கக் கோரி மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து மனுக்கள் வரப்பெற்றதால், சட்டப்பேரவையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நிபந்தனைப் பட்டா பெற்றவர்களுக்குத் தற்போது திட்ட நிபந்தனையை தளர்வுசெய்து அயன் பட்டா வழங்கப்படும்" என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் 26.11.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து அவர்களின் பிரச்சனைக்கு உடனடியாக தீர்வுகாணப்படும் என்று அறிவித்தார்கள்.

தீர்வு

அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு ஆய்வு செய்து, 06.01.2026 அன்று அமைச்சரவைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்று, 70 ஆண்டுகளாக நீடித்த நீண்ட கால பிரச்சனைக்குத் தீர்வுகாணும் விதமாக, அரசாணை நிலை எண். 122 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 02.02.2026ன்படி நிபந்தனை பட்டா பெற்றவர்களுக்கு தற்போது திட்ட நிபந்தனையை தளர்வுசெய்து அயன் பட்டா வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 வட்டங்களுக்கு உட்பட்ட 90 கிராமங்களில் உள்ள சுமார் 3300 ஏக்கர் நீர்ப்பாசனத் திட்ட நிபந்தனையுடன் வழங்கப்பட்ட நிலங்கள், நிரந்தர பட்டாவாக மாற்றம் செய்யப்பட்டு, சுமார் 2500 நில உடமைதாரர்கள் பயன்பெற உள்ளனர். இதற்கெனத் தனியாக ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

அனுப்புநர்
அம்சவேணி வேல்
103 வட்டகாடு
பெரிய புத்தூர்
சேலம்

பெறுநர்
மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள்
தமிழ்நாடு அரசு சென்னை

முதல்வர் ஐயா அவர்களுக்கு எங்களது குடும்பத்து சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

நாங்கள் எங்கள் குடும்பத்தோடு இந்த பகுதியில் 20 வருடத்துக்கு மேல் குடியிருந்து வருகிறோம் எனது கணவர் பெயிண்டர் கூலி வேலை செய்து வருகிறார் எனக்கு இரண்டு மகன் ஒரு மகள் உள்ளனர் ஒரு மகன் வெள்ளி பட்டறை கூலி வேலை ஒரு மகன் படித்து வருகிறான் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது நான் பலமுறை பட்டா கேட்டு விண்ணப்பம் செய்தோம் தற்போது உங்கள் ஆட்சியில் தான் எங்களுக்கு பட்டா கிடைத்து உள்ளது இந்த பட்டாவை எங்க ஊர் கிராம நிர்வாக அலுவலர் மூலம் கம்ப்யூட்டரில் பட்டாவை ஏற்றி கம்ப்யூட்டர் பட்டா வழங்க பட்டுள்ளது மீண்டும் எங்கள் குடும்பத்து சார்பாக முதல் அமைச்சர் ஐயா அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்

இப்படிக்கு
அம்சவேணி

அனுப்புநர்:
R. சாந்தி
க/பெ ராஜேந்திரன்
1/215 எம்.ஜி.ஆர். நகர்
பெரிய புத்தூர் அஞ்சல்
சேலம்.

பெறுநர்:
மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள்
தமிழ்நாடு அரசு.
சென்னை

முதல்வர் ஐயா அவர்களுக்கு எங்களது குடும்பத்து சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் நாங்கள் எங்கள் குடும்பத்தோட இந்த பகுதியில் 20 வருடத்துக்கு மேல் குடியிருந்து வருகிறோம் பல முறை பட்டா கேட்டு விண்ணப்பம் செய்தோம் இப்போது உங்கள் ஆட்சியில் தான் எங்களுக்கு பட்டா கிடைத்துள்ளது. இந்த பட்டாவை எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் மூலம் கிராம கணக்கில் மாற்றி எங்களுக்கு கம்ப்யூட்டர் பட்டா வழங்கப்பட்டது மீண்டும் எங்கள் குடும்பத்து சார்பாக முதல் அமைச்சர் ஐயா அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்

இப்படிக்கு
சாந்தி

அனுப்புநர்,
செ. சகுந்தலா,
க/பெ. செல்வராஜ்,
எண்.1, ராஜரத்தினம் நகர்,
பாதவேங்காடு கிராமம்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தலைமை செயலகம்,
சென்னை - 600 009.

மதிப்பிற்குரிய அய்யாவுக்கு,

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த பாதவேங்காடு கிராமத்தில் இருளர் சமூகத்தைச் சேர்ந்த 54 குடும்பங்கள் வசித்து வந்தோம். எங்களுக்கு கடந்த 10 வருசமா நாங்க குடியிருக்கும் வீட்டுக்கு பட்டா இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டோம். அரசு வழங்கும் திட்டங்களை பயன் பெற முடியாத நிலையில் இருந்தோம். இந்நிலையில் தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மூலமாக எங்களுக்கு, நாங்கள் வசித்து வரும் இடத்திற்கு பட்டா கொடுத்தாங்க. இதனால நிரந்தரமாக இருக்க இடம் கொடுத்ததன் மூலம் கரண்ட் கிடைச்சு எங்க பெண் குழந்தைங்க படிக்கவும், எதிர்காலத்திற்கும் உதவும் எங்கள் சமுதாய மேம்பாட்டுக்கும், எங்களின் வாழ்க்கை தரம் உயர்வுக்கு பெரும் உதவியாக இருக்கும் இதற்காக தமிழக முதல்வர் அய்யா அவர்களுக்கு எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
சகுந்தலா

விடுநர்

வி. செல்லம்மாள்,
க/பெ. வனோத்குமார்,
எண் 136, ராஜரத்தினம் நகர்,
படிவேற்காடு கிராமம்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர்.

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
தலைமை செயலகம், சென்னை-09.

மதிப்பிற்குரிய அய்யாவுக்கு,

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த படிவேற்காடு கிராமத்தில் இருளர் சமுகத்தைச் சேர்ந்த 54 குடும்பங்கள் வசித்து வந்தோம். எங்களுக்கு கடந்த 10-வருசமா மிகவும் நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கு பட்டா இல்லாமல் கஷ்டப்பட்டோம். அரசு வழங்கும் திட்டங்களை பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தோம். இந்நிலையில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மூலமாக எங்களுக்கு, நாங்கள் வசித்து வரும் இடத்திற்கு பட்டா கொடுத்தாங்க இதனால் நிரந்தரமாக இருக்க இடம் கொடுத்தன் மூலம் கரண்ட் கிடைச்சு எங்க பெண் குழந்தைங்க படிக்கவும் எதிர்காலத்திற்கும் உதவும். எங்கள் சமுதாய மேம்பாட்டிற்கும் எங்கள் வாழ்க்கை தரம் உயர்வுக்கு பெரும் உதவியாக இருக்கும். இதற்காக தமிழக முதல்வர் அய்யா அவர்களுக்கு எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
செல்லம்மாள்

அனுப்புநர்,

மனோகரன்,
மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து,
தூத்துக்குடி மாவட்டம்.

பெறுநர்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம்,
சென்னை.

ஐயா,

வணக்கம். என் பெயர் மனோகரன். நான் மாப்பிள்ளையூரணி கிராமத்தில் 30 வருடமாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்குப் பட்டா இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தேன். இப்போ. ஐயா ஆட்சிக்கு வந்த பிறகுதான் எங்களுக்குப் பட்டா கிடைத்திருக்கிறது. இது என்னைப் போல் உள்ள, எங்கள் ஊரில் வாழும் அனைவரும் வாழ்நாள் கனவு. இதற்காக, ஐயா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
மனோகரன்.

வருநர்,

மா. முத்தம்மா க/பெ மாரிமுத்து,
ராஜரத்தினம் நகர்,
படிவேற்காடு கிராமம்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தலைமை செயலகம்,
சென்னை- 09.

மதிப்பிற்குரிய அய்யாவுக்கு,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த படிவேற்காடு கிராமத்தில் இருளர் சமுகத்தைச் சேர்ந்த 54 குடும்பங்கள் வசித்து வந்தோம். நாங்க குடியிருக்கும் எங்களுக்கு கடந்த 10 வருசமா மிகவும் கஷ்டப்பட்டோம். வீட்டுக்கு பட்டா இல்லாமல் பயன்படுத்த முடியாத அரசு வழங்கும் திட்டங்களை நிலையில் இருந்தோம். இந்நிலையில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மூலமாக எங்களுக்கு நாங்கள் வசித்து வரும் இடத்திற்கு பட்டா கொடுத்தாங்க. இதனால நிரந்தரமாக இருக்க இடம் கொடுத்தன் மூலம் கரண்ட் கிடைச்சு எங்க பெண் குழந்தைங்க படிக்கவும், எதிர்காலத்திற்கும் உதவும். எங்கள் சமுதாய மேம்பாட்டிற்கும், எங்களின் வாழ்க்கை தரம் உயர்வுக்கு பெரும் உதவியாக இருக்கும். இதற்காக தமிழக முதல்வர் அய்யா அவர்களுக்கு எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
முத்தம்மா.

சென்னை மாவட்டம்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
வீட்டு மனைப் பட்டா வழங்கும் விழா
தலைமை
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
தலைமை

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
தலைமை

இராணிப்பேட்டை மாவட்டம்

அரசு நலத்திட்ட உதவிகள்
தலைமை

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஆண்டார்குப்பத்தில் நடைபெற்ற விழாவில், ரூ. 357 கோடியே 43 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,02,531 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் கோவிந்தராஜன், துரைசந்திரசேகர், சந்திரன், ராஜேந்திரன், கணபதி, சுதர்சனம், திருவள்ளூர் கலெக்டர் பிரதாப், டிஆர்ஓ ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொறுத்தவரைக்கும் நீட் தேர்வை எதிர்ப்பதாக இருந்தாலும்-மும்மொழித் திட்டத்தை நிராகரிப்பதாக இருந்தாலும்-வக்பு சட்டத்தை எதிர்ப்பதாக இருந்தாலும்-தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக பாதிப்படைகின்ற மாநிலங்களை ஒன்று திரட்டுவதாக இருந்தாலும், நாம் தான் இந்திய அளவில் வலுவாக ஒங்கி குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாநில உரிமையின் அகில இந்திய முகமாக திமுக தான் இருக்கிறது.

சமீபத்தில், சென்னை வந்திருந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா நாம் கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லாமல், திசை திருப்புவதற்காக இதை யெல்லாம் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று பேசினார்.

இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்துதான் ...

தமிழகத்திலேயே முதல் முறையாக கிருஷ்ணகிரியில்

85,711 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை

■ கிருஷ்ணகிரி

தமிழகத்திலேயே முதல் முறையாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 85,711 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என ஆட்சியர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறிய தாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி நகரில் 40 ஆண்டுகளுக்கு மேலாக சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டிருந்த மனை காரணமாக, அங்குள்ள மக்கள் யாரும் கணினி பட்டா பெற முடியாமல், தங்கள் மனையை வாரிசுகளுக்கு மாற்றவோ, அடமானம் வைத்து வீடு கட்டவோ, விற்கவோ இயலாமல் நீண்டநாள் சிரமப்பட்டு வந்தனர். இந்த சிரமத்தை போக்கும் வகையில், சர்க்கார் புறம்போக்கு வகைப்பாடு என இருந்ததை 'ரயத்துவாரி நத்தம் மனை' என மாற்றப்பட்டு, கிருஷ்ணகிரியில் சுமார் 3,500 பேருக்கு கணினி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், ஒசூர் நகரிலும் சுமார் 8,150 பயனாளிகள் பல ஆண்டுகளாக பட்டா பெற முடியாமல் இருந்தனர். இப்போது அவர்களுக்கும் வகைப்பாடு மாற்றி கணினி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் 97-ன் படி, நகரப் பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையற்ற புறம்போக்குகளில் வசித்து வந்த மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது.

இதுவரை இலவச வீட்டு மனைப்பட்டா என்பது ஊரகப் பகுதிகளில் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், முதல்வரின் உத்தரவால் அந்த உரிமையை நகரப் பகுதிகளிலும் மக்களுக்கு வழங்கி வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த அரசாணையின் கீழ், கிருஷ்ணகிரியில் நகரத்தில் 1,802 பேருக்கும், ஒசூர் நகரத்தில் 3,222 பேருக்கும் முறையாக வரைமுறைப்படுத்தி இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசாணை நிலை 97-ன்படி 5,154 வீட்டுமனைப் பட்டாக்களும், ரயத்துமனையாக மாற்றம் செய்யப்பட்ட 8,811 பட்டாக்களும், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் 11,174 பட்டாக்கள், நகர நில வரித்திட்டத்தில் 13,073 பட்டாக்கள், நத்தம் வீட்டுமனை 39,533 பட்டாக்கள், பட்டியல் மற்றும் பழங்குடியினர் இணையவழி 6,425 பட்டாக்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் 1,240 பட்டாக்கள், வனஉரிமைச் சட்டம் 2006-ன்படி 301 பட்டாக்கள் என மொத்தம் 85,711 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரியில் நடைபெறும் அரசு விழாவில் பயனாளிகளுக்கு வீட்டுமனைபட்டாக்களை, முதல்வர் வழங்க உள்ளார். இதற்கான பணிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையினர் மேற்கொண்டுள்ளனர். தமிழகத்திலேயே முதல்முறையாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான் 85,711 பேருக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது.

இவ்வாறு ஆட்சியர் தெரிவித்தார்.

பெரம்பலூர், வேப்பந்தட்டை தாலுகாக்களில்

ரூ.5¼ கோடியில் 440 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா

அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்

பெரம்பலூர், பிப்.13-

"என் ஊரு என் கனவு" திட்டத்தின் மூலம் 2030-ம் ஆண்டிற்குள் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களின் முன்னேற்றத்துக்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே கருத்து கேட்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளுக்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர்கள் மிருணாளினி (பெரம்பலூர்), ரத்தினசாமி (அரியலூர்), எம்.எல்.ஏ.க்கள் பிரபாகரன் (பெரம்பலூர்), சின்னப்பா (அரியலூர்), க.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதனைத்தொடர்ந்து அமைச்சர் சிவசங்கர் "என் ஊரு என் கனவு" திட்டத்தின் மூலம் 2030-ம் ஆண்டுக்குள் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்களை செயல்படுத்தலாம் என்பது குறித்து அனைத்து தரப்பினரிடமும் கருத்துகளை கேட்டறிந்தார். இத்திட்டத்தின் மூலமாக பெறப்படும் கருத்துகள் அனைத்தையும் தமிழக ... அமைச்சர் விரைவில் நிறைவேற்றுவார் என்றார்.

Minister for School Education Anbil Mahesh Poyyamozhi distributes welfare assistance in Nagapattinam on Tuesday.

Minister distributes title deeds for free house sites in Nagapattinam

The Hindu Bureau
NAGAPATTINAM

Minister for School Education Anbil Mahesh Poyyamozhi on Tuesday distributed title deeds for free house sites to various beneficiaries in Nagapattinam.

Collector P. Akash presided over the programme held at the Collector Office. A total of ...

37,000 பேருக்கு வீட்டு மனை பட்டா ரூ.1,000 கோடி உதவி தந்தார் உதயநிதி

■ திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு, சுந்தரசோழபுரத்தில் நடந்த அரசு விழாவில், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார். இடமிருந்து வலம்: எம்.எல்.ஏ., ராஜேந்திரன், அமைச்சர் நாசர், கலெக்டர் பிரதாப் மற்றும் எம்.பி., சசிகாந்த் செந்தில்.

ஆவடி, நவ. 25-

சென்னையை அடுத்த திருவேற்காடு, சுந்தரசோழபுரத்தில் நேற்று, அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.

விழாவில், துணை முதல்வர் உதயநிதி, 333 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட, 377 கட்டடங்களை காணொளி ...

சுகாதார நிலையம் திறப்பு

பாலவேடு ஊராட்சி, மேலப்பேடு பகுதியில் முன்னாள் முதல்வர் காமராஜர், 1955ல் அரசு மருத்துவமனை திறந்து வைத்தார். முறையான பராமரிப்பின்றி, ஐந்து ஆண்டுகளாக சுகாதார நிலையம் பாழடைந்து கிடந்தது.

இதனால், சுற்றுவட்டார மக்கள் சிகிச்சைக்காக, 20 கி.மீ., துாரம் பேருந்தில் ...

...ல் 530 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

அமைச்சர் வழங்கினார்

கொளக்காநத்தம் கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவை வழங்கிய அமைச்சர் சா.சி. சிவசங்கர். உடன், ஆட்சியர் ந. மிருணாளினி உள்ளிட்டோர்.

...டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 3-ஆம் கட்டமாக 277 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிய அமைச்சர் சிவசங்கர், 8.2.2025-இல் முதல்கட்டமாக 108 பேருக்கும், 17.5.2025-இல் 2-ஆம் கட்டமாக 310 பேருக்கும் என, இதுவரை மொத்தம் 695 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

70 ஆண்டு கால ...

அந்தியூர், மார்ச் 4

தமிழகத்தில் முதன் முறையாக அந்தியூர் தாலுகாவில், நிபந்தனை வகை பட்டாவை, அயன் பட்டாவாக மாற்றி அரசு உத்தரவிட்டதால் நிலையில், விவசாயிகளின், 70 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழகத்திலேயே முதல் முறையாக கிருஷ்ணகிரியில்

85,711 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை

■ கிருஷ்ணகிரி

தமிழகத்திலேயே முதல் முறையாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 85,711 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என ஆட்சியர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறிய தாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வீட்டுமனை ...

காரணமாக, அங்குள்ள மக்கள் யாரும் கணினி பட்டா பெற முடியாமல், தங்கள் மனையை வாரிசுகளுக்கு மாற்றவோ, அடமானம் வைத்து வீடு கட்டவோ, விற்கவோ இயலாமல் நீண்டநாள் சிரமப்பட்டு வந்தனர். இந்த சிரமத்தை போக்கும் வகையில், சர்க்கார் புறம்போக்கு வகைப்பாடு என இருந்ததை 'ரயத்துவாரி நத்தம் மனை' என மாற்றப்பட்டு, கிருஷ்ணகிரியில் சுமார் 3,500 பேருக்கு கணினி பட்டா வழங்க ...

அவர்களுக்கும் வகைப்பாடு மாற்றி கணினி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் 97-ன் படி, நகரப் பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையற்ற புறம்போக்குகளில் வசித்து வந்த மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது.

இதுவரை இலவச வீட்டு ...

சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த அரசாணையின் கீழ், கிருஷ்ணகிரியில் நகரத்தில் 1,802 பேருக்கும், ஓசூர் நகரத்தில் 3,222 பேருக்கும் முறையாக வரைமுறைப்படுத்தி இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசாணை நிலை 97-ன்படி 5,154 வீட்டுமனைப் பட்டாக்களும், ரயத்துமனையாக மாற்றம் செய்யப்பட்ட 8,811 பட்டாக்களும், வீட்டுவசதி வாரியத்தின் ...

மற்றும் சிறுபான்மையினர் 1,240 பட்டாக்கள், வனஉரிமைச் சட்டம் 2006-ன்படி 301 பட்டாக்கள் என மொத்தம் 85,711 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரியில் நடைபெறும் அரசு விழாவில் பயனாளிகளுக்கு வீட்டுமனைபட்டாக்களை, முதல்வர் வழங்க உள்ளார். இதற்கான பணிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையினர் மேற்கொண்டு ...

...title deeds for free house sites to various beneficiaries in Nagapattinam. Collector P. Akash pre... ...could avail many other welfare schemes of the State government, the Minister added.

40,086 குடும்பங்களுக்கு பட்டா: முதல்வர் பெருமிதம்

நாகர்கோவில், பிப். 25: கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 40,086 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார். நாகர்கோவில், கன்கார்டியா பள்ளி மைதானத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பங்கேற்று ...: இம்மாவட்டத்தில் ரூ. 30 கோடி மதிப்பி... காவுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். ... மார்ஷல் நேசமணியின் போர்ப்படை... தியாகி பொன்னப்ப நாடாரின் முழு உருவ... ...தேன். அதேபோல, முன்னாள் முதல்வர் ...யையும், எனது பெயரில் அமைக்கப்பட்ட... ரெ.மகேஷ் ஏற்பாட்டில் திறந்துவைத்திரு... கன்னியாகுமரி மீனவர்கள் நிறைந்த மாவட்டம்... திராவிட மாடல் ஆட்சியில், பல முக்கியத் திட்ட... ...ளேன். 2004-இல் சுனாமியால் பாதிக்கப்பட்... ...க்கு, நிலம் கையகப்படுத்தப்பட்டு வீடுகள்... அரசு நிலம் ...

...சில முக்கியத் திட்டங்களை மட்... டும், தலைப்புச் செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன்.

2004ல் சுனாமியால் பாதிக்...

கபாலீஸ்வரர் கல்லூரிக்கு ரூ.31 கோடியில் புதிய கட்டிடங்கள்

கொளத்தூரில் 2007 பயனாளிகளுக்கு பட்டா

முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்

■ சென்னை

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 2007 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

இதுகுறித்து, தமிழக அரசு ...

...டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், ரூ.25 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

கல்லூரி கட்டிடம் திறப்பு

இதையடுத்து, இந்து சமய ...

...கிறது என்றால், அந்த திராவிட மாடல் அரசின் மாடல் தொகுதியாக இருப்பது கொளத்தூர். ஏதோ தேர்தல் வரும்போது மட்டும் ஒன்றிரண்டு திட்டங்களை திறந்து வைக்கவில்லை. கடந்த 5 ஆண்டுகளாக, ஒவ்வொரு மாதமும் வந்து, உங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்து கொண் ...

சேவைகளை வழங்குகின்ற மக்களாட்சியாக திராவிட மாடல் பெயரெடுத்திருக்கிறது. இந்த நல்லாட்சி தொடர, நம்முடைய கொளத்தூர் மேலும், மேலும் உயர, உங்களுடைய ஆதரவு என்றும் எங்களுக்கு இருக்கும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், அன்பில் மகேஸ், மேயர் ஆர்.பிரியா, வருவாய்த் துறை செயலர் பெ.அமுதா, வீட்டுவசதித் துறை செயலர் காகர்லா உஷா, அறநிலையத் துறை செயலர் மணிவாசகன், ...க்கல்வி செயலர் சந்திர...ன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் கோ.பிரகாஷ், உயர்கல்வித் துறை செயலர் பொ.சங்கர், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், அறநிலையத் துறை ஆணையர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சென்னை பெரம்பூர் டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளைச் சார்ந்த 2007 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி.

மீண்டும் அதிகரிக்கும் தங்கம் விலை

ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,440 உயர்வு

■ சென்னை

தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.1,440 உயர்ந்து, ரூ.1,18,880-க்கு விற்கப்பட்டது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில், கடந்த ஆண்டு டிச.15-ல் ஒரு பவுன் தங்கம் ரூ.1,00,120-க்கு விற்கப்பட்டது. குறிப்பாக, ஜன.29-ம் தேதி வரலாறு காணாத விதமாக, பவுன் தங்கம் ரூ.1,34,400 ஆக அதிகரித்தது. இதன்பிறகு, ஏற்ற இறக்கமாக இருந்த தங்கம், கடந்த 21-ம் தேதி ரூ.1,17,440-க்கு விற்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தங்கத்தின் விலை நேற்று பவுனுக்கு ரூ.1,440 உயர்ந்து, ரூ.1,18,880-க்கு விற்கப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.180 உயர்ந்து ரூ.14,860 ஆக இருந்தது. 24 காரட் தங்கம் ரூ.1,29,688-க்கு விற்கப்பட்டது. இதுபோல, வெள்ளி கிராமுக்கு ரூ.10 உயர்ந்து, ரூ.300 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.10 ஆயிரம் உயர்ந்து, ரூ.3 லட்சமாக இருந்தது.

சென்னை கிண்டியில் 118 ஏக்கரில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்கா

நீர்நிலைகளில் கரைகள் அமைத்தல், செடிகள் நடவு செய்யும் பணிகளை முதல்வர் தொடங்கி வைத்தார்

■ சென்னை

பூங்காவின் சிறப்பம்சங்கள்

திட்ட அறிக்கை தயாரிப்பு

கிண்டி சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கும் திட்டத்துக்கு, ரூ.25 கோடி செலவில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை உருவாக்க கலந்தாலோசகரை நியமிக்க தோட்டக்கலைத்துறை கடந்த ஜூன் மாதம் டெண்டர் கோரியது. அந்த விரிவான திட்டத்தில், மலர் தோட்டங்கள் அமைக்கல், 3டி காட்சிகள் அமைக்கல், நடைபாதை ...

கோவையில் 994 பேருக்கு இலவச மனை பட்டா

கோவை, ஜன. 2: கோவை மாவட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் ...

...தம் புறம்போக்கில் வசித்து வரும் 29 பயனாளிகளுக்கும், ஈச்சனாரி பாடசாலை வீதி மற்றும் கணேசபுரம் ஆகிய நத்தம் புறம்போக்கில் வசித்து வரும் 18 பயனாளிகளுக்கும் மதுக்கரை குரும்பம்பாளையம் பகுதியில் வசித்து வரும் 12 பயனாளிகளும், பிச்சனூர் கிராமத்தில் வசித்து வரும் 25 பயனாளிகள் பட்டா வழங்கப்பட்டது. மொத்தம் 994 பயனாளிகளுக்கு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கோவையில் நடந்த விழாவில் இலவசமாக மனை பட்டா வழங்கினார்.

பட்டா பெற்ற மதுக்கரை தாலுகா குறிச்சி சில்வர் ஜூப்லி பகுதியை சேர்ந்த பழனியம்மாள் கூறுகையில், "நான் சமையல் வேலை செய்து வருகிறேன் ...

தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பம் வழங்கினோம்.

நீண்டநாள் கோரியினை ஏற்று தற்போது நாங்கள் வீடு கட்டி இருக்கும் இடத்தை எங்களுக்கு பட்டா போட்டு கொடுத்திருக்கிறார்கள். பட்டா பெற்றதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த இடத்திற்கு பட்டாவை கொடுத்து எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து தமிழ்நாடு முதலமைச்சருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார்.

இதேபோல் சில்வர் ஜூப்லி நகர் லட்சுமி கூறுகையில், "நான் சமையல் வேலை செய்கிறேன். இங்கே 25 ...

கோவை மாவட்டம் மதுக்கரை வட்டத்தை சேர்ந்த 994 பேருக்கு வீட்டு மனைப்பட்டா விநியோகம்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பயனாளிகள் நன்றி

கோவை, ஜன. 1–

கோவை மாவட்டம், மதுக்கரை வட்டப் பகுதிகளைச் சேர்ந்த 994 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டதற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பயனாளிகள் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி பள்ளியில் கடந்த 30ந் தேதி அன்று நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மதுக்கரை வட்டத்திற்கு உட்பட்ட குறிச்சி, பிள்ளையார்புரம், சில்வர் ஜூப்லி, போத்தனூர் வண்ணாரப்பேட்டை, சீனிவாசாபுரம் கல்லாங்குத்து, இந்திரா காலனி, ஈச்சனாரி பாடசாலை வீதி, கணேசபுரம், குரும்பம்பாளையம் மற்றும் பிச்சனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 994 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

குறிச்சி கிராமம், பிள்ளையார்புரம்



அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடு கட்டி வசித்து வரும் பட்டா இல்லாத நபர்கள், ஏற்கெனவே வழங்கப்பட்ட பட்டாவில் நில அளவு மற்றும் எல்லை வேறுபாடுகள் இருந்தவர்களுக்கு திருத்தப்பட்ட பட்டாக்கள், மேலும்

அரசு புறம்போக்கு மற்றும் நத்தம் நிலங்களில் பல ஆண்டுகளாக வசித்து வந்த தகுதியான பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டனர்.

'நிறைந்தது மனம்' நிகழ்ச்சியில் பேசிய பயனாளி பழனியம்மாள் (குறிச்சி – சில்வர் ஜூப்லி) கூறுகையில், "நீண்ட ஆண்டுகளாக வசித்து வந்த இடத்திற்கு சொந்த பட்டா கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. எங்கள் வாழ்வில் ஒளி ஏற்றிய முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றி," என்றார்.

அதேபோல், பயனாளி லட்சுமி கூறுகையில், "புறம்போக்கு நிலத்தில் வசித்து வந்ததால் கடன் வசதி உள்ளிட்ட பல வாய்ப்புகள் இல்லை. தற்போது ...

... பிரச்னைக்கு தீர்வு

... நடந்த விழாவில், அயன் பட்டா பெற்ற விவசாயிகளுடன், ...ந்துசாமி, எம்.எல்.ஏ., வெங்கடாசலம் ஆகியோர் உள்ளனர்.

...கந்தசாமி தலைமை ...அமைச்சர் முத்துசாமி ...ண்டு, முதல் கட்டமாக ...ளையம் மற்றும் சென் ...ராட்சியில், 224 விவ... அயன் பட்டா வழங் ...

... அமைச்சர் பேசிய ...ந்தியூர் தாலுகாவில் ...பட்டாக்களை அயன் ... மாற்றித்தர, விவசா... காலமாக கோரிக்கை ...த்தனர். முதல்வருக்கு ... கொண்டு சென்ற ...ருவாய்த்துறை அதிகா... ...மத்து, நிபந்தனையை நீக்கிட உத்தரவிட்டார். இதனால், 70 ஆண்டு கால பிரச்னைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்தார். தமிழகத்தில் முதன் முறையாக அந்தியூர் தாலுகாவில் மட்டுமே நிபந்தனை பட்டா, அயன் பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

★ மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி கரட்டாம்பாளையத்தில் இலவச வீட்டுமனை பட்டா, வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. வீட்டு வசதித் துறை அமைச்சர் முத்துசாமி, மொடக்குறிச்சியை சேர்ந்த, 392 பேருக்கும், கரட்டாம்பாளையத்தை சேர்ந்த, 224 பேருக்கும் வழங்கினார்.

... திறந்து வைத்திருக்கிறேன்.

மீனவர்களுக்கு பட்டா

2025 புத்தாண்டு பிறப்பதற்கு முன்பு நான் குமரிக்கு வந்தேன். முக்கடல் சூழக்கூடிய குமரி முனையில், முப்பால் புலவன் வள்ளுவனுக்கு, தலைவர் கருணாநிதி நிறுவிய பேரறிவுச்சிலையின் வெள்ளிவிழாவை நாம் கொண்டாடினோம். ...

...தப்பட்டு பட்டா வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, 40 ஆயிரத்து 86 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மீன்பிடி துறைமுக விரிவாக்கம்

அதேபோல், தேங்காய்ப்பட்டணம் துறைமுக விரிவாக்கப் பணிகள் உட்பட தூண்டில் வளைவுகள், மீன் இறங்குதளங்கள், படகு அணையும் தளங்கள், வலை பின்னும் கூடங்கள், மீன் ஏலக்கூடங்கள் இப்படி, பல பணிகளை குமரி மாவட்ட மீனவர்களுக்காக செய்து ...

■ கொளக்காநத்தத்தில்

530 பயனாளிகளுக்கு ரூ.5.33 கோடி மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டா

அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்

பாடாலூர், பிப்.17: வருவாய்த் துறையின் மூலம் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னம் மற்றும் ஆலத்தூர் தாலுகாவை சேர்ந்த 530 பயனாளிகளுக்கு ரூ.5.33 கோடி மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை கொளக்காநத்தம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். விழாவுக்கு கலெக்டர் மிருணாளினி தலைமை வகித்தார். ஆலத்தூர் கிழக்கு திமுக ஒன்றிய செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் கூறுகையில், ...

ஆலத்தூர் தாலுகா- கொளக்காநத்தத்தில் நடந்த விழாவில் 530 பயனாளிகளுக்கு ரூ.5.33 கோடி மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். அருகில் கலெக்டர் மிருணாளினி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ...

லின்" என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தினார். ...களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற, ஊரகப் பகுதிகளில் 10,000 முகாம்கள் நடத்தப்பட்டு, இந்த முகாம்களில், பல்வேறு துறைகளின் மூலம் 46 வகையான சேவைகள் வழங்கப்பட்டது. பொதுமக்கள் இந்த சேவைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். ...

...ளிகளுக்கு ரூ.1 கோடியே 52 லட்சம் மதிப்பிலும் என மொத்தம் 530 பயனாளிகளுக்கு ரூ.5 கோடி 33 லட்சத்து 22 ஆயிரத்து 431 மதிப்பிலான வீட்டுமனை ...

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

2026

நில உரிமை!
கனவுகள் நிறைவேறின...

2021-26

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை